விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | பங்குனி 10 | வெள்ளிக்கிழமை (24.03.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 95

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

### அனுசரணைப் பணியில் இருந்து

# நோர்வே அரசை விலக்கிக் கொண்டால் பேச்சு மேசையிலிருந்து புலிகள் விலகுவர்

## அநுரா பண்டாரநாயக்க எச்சரிக்கை



(கொழும்பு)

சமாதான ஏற்பாட்டாளர் பதவியில் இருந்து நோர்வேயை அரசாங்கம் விலக்கிக் கொண்டால் பேச்சுமேசையில் இருந்து விடுதலைப்புலிகள் விலகிச் சென்று விடுவார்கள் என சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க எச்சரித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் வேறு எந்தவொரு ஏற்பாட்டாளர்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே நோர்வே அரசாங்கத்தை சமாதான ஏற்பாட்டாளர் பதவியில் இருந்து மாற்றக்கூடாது என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பி.பதவியில் இருந்து சோனியா இராஜினாமா



(டில்லி)

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் தேசிய ஆலோனைக்குழு தலைவர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

இதற்கு முன்னர் ஆதாயம் தரும் வேறொரு பதவியில் இருப்பதாக சமாஜி வாதிக் கட்சியின் ஜெயாப் பச்சனின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டது.

இதற்கு எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் எதிர்த்து பெரும் அமளியில் ஈடுபட்டன. சோனியா காந்தியும் ஆதாயம் தரும் பதவியில் இருப்பதால் அவரை எம்.பி.பதவியில் இருந்து விலக்க வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்தின.

இந்த நிலையில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது எம்.பி.பதவியையும் தேசிய ஆலோசனை சபையின் தலைவர் பதவியையும் இராஜினாமா செய்துள்ளார். (ச–5)

## திருகோணமலையில் இன்று ஹர்த்தால்

(திருகோணமலை)

அரச படைகளின் செயற்பாடுகளைக் கண்டித்து திருகோணமலையில் இன்று வெள்ளிக்கிழமை முழு கதவடைப்புப் போராட்டம் நடாத்தப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை பொங்கியெழும் மக்கள் சமூகம் விடுத்துள்ளது. ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட விடயங்களை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வராமை, திருகோணமலை மூதூர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கடந்த இரு நாட்களாக கடற்படையால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு ,அரசினால் சமாதான காலத்தில் போடப்பட்ட கடல் வலயச் சட்டம் ஆகியவற்றைக் கண்டித்து திருகோணமலை மாவட்ட பொங்கியெழும் மக்கள் சமூகத்தினரால் இன்று மாவட்டம் தழுவிய முழுக் கதவடைப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இக் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவினை வழங்குமாறு பொங்கியெழும் மக்கள் படை வேண்டுகோள் விடுத்துள்ளது. இதேவேளை ஜெனீவாவில் பேசப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தக்கோரி வடக்கில் அடுத்த வாரம் ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச–4)

## இனம்புரியாத காய்ச்சலினால் பெருமளவானோர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு வாரங்களாக காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை அதிகரித்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் காய்ச்சலினால் மாணவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. காலம் மாறிப் பெய்த மழை மற்றும் தற்பொழுது காணப்படும் கடும் வெயில் ஆகியவற்றின் காரணமாகவே இக் காய்ச்சல் ஏற்படுவதாகவும் அது சாதாரண வைரஸ் காய்ச்சல் எனவும் கூறப்பட்டது.

இதேவேளை இவ் வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களில் பெருமளவிலானோர் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### வடமராட்சி கடற்பரப்பில்

# கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு 3 மாதங்களின் பின் அனுமதி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட மீனவர்களுக்கு மூன்று மாதங்களின் பின்னர் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். தொண்டமனாறு பெரிய கடற்கரை சன சமூக நிலைய மண்டபத்தில் நேற்று நடை பெற்ற மீனவர்களுடனான கூட்டத்தில் படை அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய அக்கரை,தொண்டமனாறு , வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடும்போது தமது படகுகளில் வெள்ளைக் கொடி பறக்கவிடவேண்டும் என்றும் சூள் விளக்கு பயன்படுத்தவேண்டுமென்றும் படையினர் நிபந்தனை விதித்துள்ளனர்.

இதேவேளை மீன்பிடிக்க அனுமதிக்காவிடின் சிவில் நிர்வாகத்தை முற்றாக முடக்கும் வகையில் இன்று மாபெரும் போராட்டத்தில் வடமராட்சி மீனவர்கள் ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தனர். இந் நிலையிலேயே படையினர் இவ் அனுமதியினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச–5,35)

## முஸ்லிம் ஊர்காவல் படையினர் நேற்று புலிகளால் விடுதலை

தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட இரு முஸ்லிம் ஊர்காவல்படையினர் நேற்று முஸ்லிம் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மூதூர் கிழக்கு சம்பூரில் உள்ள திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் செயலகத்தில் தோப்பூர் மற்றும் மூதூர் பள்ளிவாசல் சபைகளின் தலைவர்களிடம் இருவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் இருவரையும் திருமலை கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் ஒப்படைத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

*your friend in the skies...*

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.



எக்ஸ்போ ஏயர்



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# நேரத்தின் பெறுமதியை உணருங்கள்

காலம் கண் போன்றது கடமை பொன் போன்றது என்பதை நாம் அனைவருமே அறிவோம். கண், பொன் இந்த இரண்டுமே இந்த உலகில் மிகவும் முக்கியமானதும், பெறுமதிமிக்கது மாகும். இருந்தும்கூட நடைமுறை வாழ்க்கையை எடுத்துக்கொண்டோமானால் நேரம் பல வழிகளில் வீணாக்கப்படுவதையும், கடமையை தள்ளிப்போடு வதையும் பெரும்பாலும் காணக்கூடிய தாகவே உள்ளது. இதற்கு காரணம் நாம் செய்யும் செயலின் மகத்து வத்தை உணராது இருப்பது. நாம் செய்ய நினைப்பது சரியாக இருப்பினும் அதாவது எண்ணம் உயர்ந்ததானாலும் அதை சரியான நேரத்திற்கு முறையாக செய்வதற்கு அதில் சக்தியற்ற தன்மை, அதே போன்று நாம் எந்த நேரத்திற்கு எந்தக்காரியத்தைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எதனை முதலில்செய்ய வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வினைக் கொண்டிராத பொழுதும்கூட நாம் நம்முடைய கடமையைச் செய்வதில் காலத்தை விரயம் செய்யக் கூடும்.

சிலர் முக்கியமான விடயங்கள் மீது மட்டும் அதிகமாக கவனம் செலுத்துவதும், சிறிய விடயமானாலும் அவசியமான விடயங்களில் அலட்சியமும், கவனக் குறைவும் கொண்டிருப்பதனால் தாம் அடைய வேண்டிய குறிக்கோளானது மிகவும் தூரத்தில் இருப்பதாக உணர்கின்றார்கள். அதாவது சிறிய விடயமாக இருந்தாலும் கூட நாம் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தக்க சமயத்தில் சரியான நேரத்திற்கு செய்தோமாயின் அதன் பலனை உடனடியாக எம்மால் உணர முடியும் என்பதில் ஐயமில்லை.

நம்மில் பெரும்பாலானோர் என்ன செய்கின்றார்கள் என்றால் ஒன்றில் தம் வாழ்வில் கடந்ததைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். அல்லது எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இதனால் அவர்களால் நிகழ்காலத்தின் சந்தோஷத்தையும், பலனையும் அனுபவிக்க முடிவதில்லை. அதாவது ஒருசிலர் தாங்கள் எப்போதோ செய்த தவறினை பல வருடங்களுக்கு பின்னும் கூட அதனை நினைப்பதிலும் பேசுவதிலும் நேரத்தை விரயம் செய்வார்கள். பொதுவாக நாம் ஒரு தவறிணை செய்தோமாயின் அதில் இருந்து ஒரு படிப்பினையைபெற்றுக்கொண்டு அந்தத் தவறிணை மீண்டும் செய்யதிருப்பதே நல்லது.

அதேபோன்று இன்னொரு சாரார் தமக்கு யாராவது ஒருவர் துன்பத்தைக் கொடுத்திருந்தாலோ அல்லது தமக்கு இகழ்வினைக் கொண்டு வந்திருந்தாலோ பல வருடங்களுக்கு பின்னும் கூட சில வேளைகளில் அந்த நபர் இறந்தும் போய் இருப்பார். அந்த நிகழ்வினைப்பற்றி பேசுவதிலும், அழுது புலம்புவதிலும் தங்களின் பெறுமதிமிக்க நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பார்கள்.

இது நமது நேரத்தை வீணாக்குவது மட்டுமல்லாது உளவியல் ரீதியிலான தாக்கத்தினையும் ஏற்படுத்தக்கூடியது. ஆகவே இதற்கு மன்னித்தல், மறத்தல் என்ற கற்பித்தலை நமக்கு நாமே கற்பித்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் காலமும் கடமையும் நம்மைவிட்டு தூர விலகிச் சென்று கொண்டே இருக்கும். பின்னர் வேதனையும் விரக்தியுமே நம்முடைய சொத்தாகிவிடும்.

ஒரு சுவர் எழுப்ப முழு கற்கள் மட்டுமல்லாது சிறிய கற்களையும் பயன்படுத்தினால் மட்டுமே அழகான சுவர் எழுப்ப முடியும். ஆகவே நாம்நம்முடையவாழ்வில் அனைத்தின் மீதும், நகர்ந்து சென்று கொண்டிருக்கும் ஒவ்வொரு செக்கனிலும் விழிப்புணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும். நாம் இந்தக் கணப் பொழுதினில் வீணாகக் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும் நம்முடைய இன்றைய வாழ்விலும், எதிர்காலத்திலும் நாம் அடையவேண்டிய பலாபலனை அனுபவிக்க முடியாமற் செய்வதற்கு நாமே காரணமாகிவிடுவோம். இப்பொழுது நகரும் ஒவ்வொரு நாளிகையும், நாட்களும் என் வாழ்வின் ஒவ்வொரு நாட் களையும் குறைத்துக் கொண்டே வருகின்றது என்ற உண்மையை நாம் நம் உள்ளத்தில் வைத்திருக்க வேண்டும். கடிகாரம் சுழன்று கொண்டே இருக்கின்றது. இந்தச் சுழற்சியின் பெறுமதியை நாம் உணர்வதே முக்கியமான விடயம்.

* ஒரு ஆண்டின் பெறுமதியை உணர வேண்டுமாயின் பரீட்சையில் தோல்வியுற்ற மாணவனைக் கேளுங்கள்.

* ஒரு மாதத்தின் பெறுமதியை உணர வேண்டுமாயின் குழந்தைக்கு பிறப்பைக் கொடுக்கவுள்ள கர்ப்பிணித் தாயைக் கேளுங்கள்.

* ஒரு வாரத்தின் பெறுமதியை உணர வேண்டுமாயின் வாரப்பத்திரிகையின் ஆசிரியரைக் கேளுங்கள்.

* ஒரு மணித்தியாலயத்தின் பெறுமதியை உணர வேண்டுமாயின் சந்திப்பிற்காக காத்திருக்கும் காதலர்களைக் கேளுங்கள்.

* ஒரு நிமிடத்தின் பெறுமதியை உணர வேண்டுமாயின் புகையிரதத்தைத் தவறவிட்ட நபரைக் கேளுங்கள்.

* ஒரு செக்கனின் பெறுமதியை உணர வேண்டுமாயின் விபத்திலிருந்து தப்பிய ஒருவரைக் கேளுங்கள்.

* ஒரு அரைச் செக்கனின் பெறுமதியை உணர வேண்டுமாயின் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கத்தை வென்றெடுத்த நபரைக் கேளுங்கள்.

ஆகவே இந்த நேரம் அல்லது காலம் என்பது ஒரு அதி சிறந்த பெறுமதிவாய்ந்த பொக்கிஷம். அதனால்தான் கூறப்படுகின்றது.

நேற்றைய நாள் ஒரு கதை
நாளைய நாள் ஒரு விடுகதை
இன்றைய நாள் ஒரு பரிசு
ஆகவே ஏன் பரிசு
எனப்படுகின்றது என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.

பிரம்ம குமாரிகள்
இராஜயோக நிலையம்


## சிறு விளம்பரம்

### நோயாளிகளின் கவனத்திற்கு

உங்கள் வியாதிகள் கண்டு பிடிக்க முடியாதவையா? நாட்பட்டவையா? மாற்றமுடியாது என வைத்தியர்கள் பலர் கைவிரித்து விட்டார்களா?

கவலை வேண்டாம்! எங்களை நாடுகள். ஷென்மென் அக்குபன்சர் வைத்தியசாலை, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (மியுசிக் வேர்ல்ட் முன்பாக) (199)


## கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை தமிழர் ஒருவர் சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜேர்மனியிலிருந்து இலங்கை வந்தவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து சினைப்பர் துப்பாக்கியின் பாகங்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் கொண்டு வந்த பயணப் பையில் டார்க்கட் இன்டிகேட்டர், பைனோ குலோஸ் ஏழு, ஸ்கேனர், நைட் விஷன், வேசர்லைட், ரெம்போ கத்தி, துப்பாக்கியின் சுத்தகரிப்புக் கருவி என்பன இருந்ததாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் தமிழர் என்று கூறிய சுங்க அதிகாரிகள் அவரின் பெயரை வெளியிட மறுத்து விட்டனர். இவர் புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார். (க)

## இராசி பலன்

**24.03.2006**
**(பங்குனி 10, வெள்ளிக்கிழமை)**
**தசமி பின்னிரவு 4.07 மணிவரை**
**உத்தராடம் பின்னிரவு 3.40 மணிவரை**
**இராகுகாலம் 10.46-12.16மணிவரை**
**சுபநேரம் 6.16-7.46 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | கடின உழைப்பு, தெய்வசிந்தை, சுப நிகழ்வு, நல்ல செய்தி. |
| இடபம் | ஆன்றோர் மதிப்பு, உடல்உழைப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம். |
| மிதுனம் | வீண்தொல்லை, உடல்நலக்குறைவு, புதிய திருப்பம், காரிய தடங்கல். |
| கடகம் | தெய்வதரிசனம், ஆயூர்வசந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம். |
| சிங்கம் | பணவருவாய், சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், உடல்நலம். |
| கன்னி | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பணவிரயம். |
| துலாம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, முயற்சி கைகூடும். |
| விருச் | கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, நல்ல செய்தி. |
| தனுசு | மாதர் நட்பு, காரியதாமதம், பொருள் விரயம், உணர்ச்சிவசப்படல். |
| மகரம் | நல்ல முயற்சி, ஆழ்ந்தசிந்தை, போசன சுகம், தெய்வசிந்தை. |
| கும்பம் | காரிய அலைச்சல், பணவிரயம், மனக் குழப்பம், சயனசுகக்குறைவு. |
| மீனம் | தெய்வ தரிசனம், தொழில்சிந்தை, மன மகிழ்ச்சி நண்பர்கள் சந்திப்பு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
\- வளவன்

## பாதுகாப்பு பிரிவினருக்கு பிரித்தானியாவில் பயிற்சி

இலங்கையின் பாதுகாப்புப் பிரிவினருக்குபிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சினால் ஒன்றிணைந்த



இராணுவச் செயற்பாடுகள் குறித்த பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

பிரித்தானியத் தூதரகத்தின் அனுசரணை மற்றும் உதவியுடன் பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சினால் இலங்கையின் சிறப்பு முப்படைகளின் அதிகாரிகளுக்கு கடந்த திங்கட்கிழமை முதல் 24ஆம் திகதிவரை கொழும்பு, ஹோட்டல் கலதாரியில் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பிரித்தானியாவின் நோர்த்வூட்டில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் பிரதான ஒன்றிணைந்த கட்டளையகத்தினால் இணைந்த திட்டமிடல் பாட விதானம் குறித்த விளக்கங்கள் இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு முதல் முறையாக பிரித்தானியாவினால் இந்த சமாதான காலத்தில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி வகுப்புக்களுக்கு பிரித்தானியாவின் ஷிறிவென்காம் பகுதியில் அமைந்துள்ள கிரான்பீல்ட் பல்கலைக்கழகம், பிரித்தானியாவின் பாதுகாப்பு ஆணையகம் என்பன உதவிகள் வழங்கி வருகின்றன. (க)

## வீடுகள் அமைப்பு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஜி.ரி.சற் நிறுவனத்தினால் 60 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கோவிற் குடியிருப்பில் 10 வீடுகளும், கல்வ யலில் 14 வீடுகளும், சரசாலையில் 14 வீடுகளும், எழுதுமட்டுவாளில் 22 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. 2 அறை ஒரு விறாந்தை, ஒரு குசினி என்ற அமைப்பில் ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவிடப்படவுள்ளது.

ஒரு சில நாட்களில் இவ் வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெடிபொருட்களுடன் கைதானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளல்ல!

(கொழும்பு)

பருத்தித்துறை முனைக்கடல் பகுதியில் 20 வெடிபொருட்களுடன் கடற்படையினரினால் கைதானவர்கள் தமது உறுப்பினர்கள் அல்ல என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கடற்படையினரினால் வழி மறிக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட படகு விடுதலைப் புலிகளுடையது என்றும் அதில் பயணம் செய்தவர்கள் விடுதலைப்புலிகள்எனவும் இலங்கை படைத்தரப்பு தெரிவித்திருப்பது உண்மைக்கு புறம்பானது எனவும் கைதானவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல என் பதை தாம் உறுதிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். (க-9)








யாழ்ப்பாணம் மாநகரசபை நிலைத்தகு நகர நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் யாழ்.மாநகர ஆணையாளர் சி.வீ. கே.சிவஞானம் தலைமை உரையாற்றுவதையும், கலந்துரையாடலில் பங்குகொண்ட தொழில்நுட்ப மதியுரைஞர் கலாநிதி பாமி இஸ்மாயில், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் ஆகியோரையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ரி.ராஜா, திலீவின்பன்)

# ஸ்கந்தா - மகாஜனாவுக்கிடையிலான வீரர்களின் போரும் நண்பர்களின் போரும்

## வீரர்களின் போர்


### ஸ்கந்தவரோதயக் கல்லூரி



அமர்ந்திருப்பவர்கள்
இடமிருந்து வலம் :- ஜெ.ஜெயகிருஷ்ணன் (உதவிப் பயிற்றுநர்), வ.நந்தீஸ்வரன் (அணிப்பொறுப்பாசிரியர்), சி.மகேந்திரன் (உபஅதிபர்), சு.கஜந்தன் (உபஅணித் தலைவர்), க.சிவாஜி (அதிபர்), கு.நிஷாகரன் (அணித்தலைவர்), இ.ஜோர்ஜ் (பிரதி அதிபர்), ஆறு.திருமுருகன் (உப அதிபர்), மு.நடராஜா (விளையாட்டுத்துறை முதல்வர்), மு.குமரறூபன் (பயிற்றுநர்) AB

நிற்பவர்கள்:- முதல் வரிசை - க.நிரோஜன், கு.செபஸ்ரீன், க.ரமணன், யோ.ரஜீவன், செ.சதீஸ்வரன், சு.அருட்குமரன், ஹே.பிரகாஷ், கே.சஞ்சயன், க.விஷ்ணுபிரகாஸ்.
நிற்பவர்கள்:- இரண்டாம் வரிசை - ச.இந்திரகுமார், தே.சசிக்குமார், எ.ஜெலன்ஸ், சு.தினேஸ்குமார், இ.பிரசாத், அ.லதீஸ்.

### யா/மகாஜனாக் கல்லூரி



அமர்ந்திருப்பவர்கள்
இடமிருந்து வலம் :- என்.புதித தயாபாரன் (விளையாட்டு முதல்வர்), ஜி.பிரபாகரன் (உதவிப்பயிற்றுநர்), ஜே.ஜெயப்பிரியந்தன் (அணித்தலைவர்), பி.சுந்தரலிங்கம் (அதிபர்), பி.ஜீவசங்கர் (உப அணித்தலைவர்), இ.வி.கே.ஜோன்சன் (ஆசிரியர்), கே.மயில்வாகனம் (அணிப்பொறுப்பாசிரியர்), என்.சிறீதரன் (பயிற்றுநர்).

நிற்பவர்கள்:- இடமிருந்து வலம் - கே.மாதவன், எஸ்.அகுலன், ஆர்.டிக்சான், ஆர்.திலீபன், என்.திலீபன், எம்.எல்மோ நிக்ஷன், ஏ.அருட்செல்வன், வி.புவனீசன், ரி.மயூரன், ஏ.பிரகலாதன், ஆர்.தர்சன்.

யாழ்.ஸ்கந்தவரோதயாக் கல்லூரி - யாழ்.மகாஜனாக் கல்லூரி கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான வீரர்களின் போர்த் துடுப்பாட்டம் நாளை சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு ஸ்கந்தவ்ரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இவ் வீரர்களின் போரில் கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் எம்.கதிர்காமநாதன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும், ஸ்கந்தாவின் மைந்தர்களான இ.குமரன் - ஆசிரியர், இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி, இ.குகன் -பௌதிகத் துறை முன்னணி ஆசிரியர், என்.நந்தரூபன் - வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர், புரவலர் பொ.சுந்தரலிங்கம் - அதிபர் மகாஜானக் கல்லூரி ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும், கே.கனகசிங்கம் - முகாமையாளர் செலான் வங்கி, யாழ்.கிளை, இ.செல்வராசா - ஓய்வுபெற்ற ஆசிரியர் மகாஜனாக் கல்லூரி ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும், வி.பாலசிங்கம் (A.D.E) - துறைசார் விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

துடுப்பாட்டத்தில் வெற்றி பெறும் அணியினருக்கு திருமதி பரமேஸ்வரி கதிர்காமநாதன் பரிசில் வழங்குவார். (து)

## நண்பர்களின் போர்

யாழ்.ஸ்கந்தா பழைய மாணவர்களுக்கும் யாழ்.மகாஜனா பழைய மாணவர்களுக்குமிடையிலான நண்பர்களின் போர் துடுப்பாட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இந் நண்பர்களின் போரில் ஸ்கந்தாவின் மைந்தன் என்.நாகேஸ்வரன் - முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழக கிளை - பிரதம விருந்தினராகவும், மகாஜனாவின் மைந்தன் ரி.இராஜேந்திரன் சிறப்பு விருந்தினராகவும், ஸ்கந்தாவின் மைந்தர்களான பா.பிரசன்னா - முகாமையாளர், சிலிங்கோ ஆயுட் காப்புறுதிக் கம்பனி, சுன்னாகம், கு.ந.அரசரத்தினம் - தொழில் அதிபர், நாகம்ஸ் நிறுவனம், சுன்னாகம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், யாழ்.மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநர் வி.கே.சண்முகலிங்கம் துறைசார் விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி நந்தினி நகேஸ்வரன் பரிசில்களை வழங்குவார். (து)

## தேசிய மட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் தேசிய மட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமையும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு சிறிமாவோ பாலிகா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் ஆண், பெண் அணிகளும் பங்குபற்றவுள்ளன.

இதற்காக இன்று இவ் இரு அணிகளும் கொழும்பு பயணமாகவுள்ளன.

பெண்கள் அணியில் கலந்துகொள்வோரின் பெயர் விபரம் வருமாறு,

வாசுகி திருநாவுக்கரசு, நிலாந்தி பாலகிருஸ்ணன் (தலைவி), சியாமா சூடாமணி (உப தலைவி), தயாளினி செல்வராஜா, ஜெரால்டின் றெமின்டா யோன் விக்ரர், பிருந்தா சோமசுந்தரம், சிறி காயத்திரி திருநாவுக்கரசு, மயூரி கந்தசாமி, வினோஜா எழில் மோகன், கௌசிகா சோமசுந்தரம், மயூதினி குணரட்ணம், பபித்தா வசந்தகுமார், மேனகா சிதம்பரநாதன், ஆஷாசந்திரிக்கா புவனேஸ்வரன்.

ஆண்கள் அணியில் கலந்துகொள்வோர் விபரம் வருமாறு

சூடாமணி அகிலன் (தலைவர்), செல்வராஜா ரமணன், மதிவதனன் மரியதாஸ், கனகரட்ணம் கனகராஜா, தங்கன் இன்பதாஸன், ஆனந்தகிருஷ்ணன் கமலகுமார், புவனேஸ்வரன் டினேஸ்குமார், தேவராஜா திவாகர், காசிநாதர் பிரசாத், வடிவேலு செந்தூரன், இருதயநாயகம் சசிகுமார் (உபதலைவர்), பரராஜசேகரம் பார்த்தீபன். (க)

## இரத்தினக்கல் ஏற்றுமதியில் மோசடி

(கொழும்பு)

இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்படும் இரத்தினக் கற்கள் மோசடியான முறையில் ஏற்றுமதி செய்யப்படுவதாக இலங்கை இரத்தினக்கல் அதிகாரசபை மேற்கொண்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு நிறுவனமொன்றும் இலங்கையைச் சேர்ந்த சிலரும் பெறுமதி வாய்ந்த இரத்தினக் கற்களை குறைந்த விலைக்கு மதிப்பிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

150 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் அண்மையில் வெளிநாடு ஒன்றுக்கு ஏற்றுமதி செய்யத் தயாராக வைக்கப்பட்டிருந்த போது இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

இரத்தினக் கல் அதிகார சபை இந்த இரத்தினக் கற்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாக அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த-9)

## மோசடியில் ஈடுபட்ட 800 பரீட்சார்த்திகள் குறித்த விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் மோசடிகளில் ஈடுபட்ட 800 பரீட்சார்த்திகள் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணைகள் முடிந்ததும் அவர்களின் பெறுபேறுகளை இடைநிறுத்தவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, பரீட்சையில் மோசடிகள் இடம்பெற்றமை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் இதன் பின்னர் இவர்கள் பரீட்சைகளுக்குத் தோற்றாமலிருக்க தடை விதிக்கப்படலாமென்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (கு-7)

## சவுதி அரேபியாவிலிருந்து பலர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பல இன்னல்களுக்கு ஆளாகிய இலங்கையர்கள் பலர் நேற்றுமுன்தினம் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சவுதியில் பல இன்னல்களை எதிர்கொண்டு நாடு திரும்பியவர்களில் 30 பேர் பெண்களாவார்கள்.

அந்த நாட்டில் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கு தாங்கள் இலக்கானதாக அவர்களில் சிலர் தெரிவித்துள்ளார்கள்.

தங்களுக்கான சம்பளம் உரிய முறையில் வழங்கப்படவில்லை என்றும் நாடு திரும்பியோரில் பெரும்பாலானோர் தெரிவித்துள்ளார்கள்.

இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுள்ளது. (கு-9)

மார்ச் 24
உலக காசநோய் தினம்
முறையான சிகிச்சை பெறுவதன் மூலம் காசநோயை முற்றாகக் குணப்படுத்தலாம்.
யாழ்மாவட்ட காசநோய்த் தடுப்புச் சங்கம்

# இன்று ஒரு தகவல்

## ஏற்றுக்கொள்ளுங்கள்

நம்மில் சில பேர் தமக்கு எதிரில் உள்ளவர்களை எதிரியாக நினைப்பார்கள். பார்ப்பது முழுவதும் பகையாகவே தெரியும். இவர்களுக்கு குறை எங்கிருப்பதாக நினைக்கிறீர்கள்? வெளியில் இல்லை. அவர்களிடம் தான் இருக்கிறது. ஏற்றுக்கொள்ளும் சுபாவமில்லாவிட்டால் இதுபோன்ற சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். உன்னைச் சுற்றி இருக்கும் எல்லாமே உனக்கு வெறுப்பைத் தருவதாக நீ உணர்ந்தால்... உனக்குள் நீ வெறுப்புடன் இருக்கிறாய் என்பதை அது காட்டுகிறது என்கிறார் ஓஷோ.

அவர் ஒரு சமயம் ஒரு கிராமத்திற்குப் போனார். அங்கே ஒரு ஓய்வு விடுதியில் தங்கியிருந்தாராம். மிகவும் சிறிய கிராமம். அங்கு நாய்கள் மிகவும் அதிகம். இரவானால் எல்லா நாயும் அங்கே மரத்தடியில் வந்து கூடிவிடும். வள் வள் என்று குரைக்க ஆரம்பித்துவிடும். அந்த ஓய்வு விடுதியில் மந்திரி ஒருவரும் வந்து தங்கியிருக்கிறார்.

அவருக்கு அந்த நாய்கள் குரைப்பது பெரிய தொந்தரவாக இருந்தது. தூங்க முடியவில்லை. பாதி இராத்திரியில் எழுந்து இவரிடம் வந்தார். அந்த சமயம் இவர் அசந்து தூங்கிக்கொண்டிருந்தார். இவரை எழுப்பிச் சொன்னாராம் அவர் "சுற்றிலும் இவ்வளவு சத்தங்களுக்கிடையில் எப்படி இவ்வளவு நிம்மதியாகத் தூங்க முடிகிறது?" என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு இவர் சொன்னார். "அந்த நாய்கள் உங்களுக்காகக் கூடவில்லை. உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக அவை இங்கு வரவில்லை. அவை பத்திரிகை படிப்பதில்லை. அதனால் ஒரு மந்திரி இங்கே வந்து தங்கியிருக்கிறார் என்பது அவற்றுக்குத் தெரியாது. அவற்றுக்கும் உங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவை தம் வேலையைச் செய்கின்றன. நீங்கள் ஏன் துன்பப்படுகிறீர்கள்?" என்றார்.

"அவையெல்லாம் குரைத்து சத்தம் போட்டுக்கொண்டிருந்தால் நான் எப்படித் துன்பப்படாமல் இருக்க முடியும்?" என்றார். இவர் அதற்கு விளக்கம் கொடுத்தார். "நீங்கள் அவை குரைப்பதை எதிர்த்துப் போராடாதீர்கள். நீங்கள் அவற்றுடன் போராடுகிறீர்கள்? அதுதான் பிரச்சினையை உண்டாக்குகிறது. பிரச்சினையை உருவாக்குவது அவற்றின் சத்தம் இல்லை. அந்தச் சத்தத்தினால் நீங்களே உங்களை தொந்தரவாக நினைக்கிறீர்கள். நீங்கள் அந்தச் சத்தத்திற்கு எதிராக இருக்கிறீர்கள். நீங்களாகவே உங்களுக்குள் ஒரு நிபந்தனையை ஏற்படுத்திவிட்டீர்கள். இந்த நாய்கள் குரைப்பதை நிறுத்தினால் தான் நான் தூங்க முடியும் என்ற நிபந்தனையை நீங்களே உங்களுக்கு விதித்துக்கொண்டீர்கள்.

உங்கள் நிபந்தனையை நாய்கள் கவனிக்கப் போவதில்லை. ஆனால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்றால் உங்கள் நிபந்தனை நிறைவேறினால்தான் தூங்க முடியும் என்று நினைக்கிறீர்கள். அதனால் உங்கள் நிபந்தனை தான் உங்களைத்தொந்தரவு செய்கிறது. நீங்கள் செய்யவேண்டியது என்ன தெரியுமா? நாய்கள் குரைப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள் அவை குரைப்பதை நிறுத்தினால் தான் தூங்குவேன் என்ற நிபந்தனையை விலக்குங்கள்.

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை நமக்குத் தகுந்தாற்போல் நிர்ப்பந்தப்படுத்தவேண்டும் என்று நினைக்கிறோம் பாருங்கள் அது முடியாத காரியம். எது எப்படி இருக்குமோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகவேண்டும்.

ஒருவர் வந்தார்..."சார் எங்கள் வீட்டில் தினமும் பயங்கரமான குறட்டைச் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். இருந்தாலும் அது எனக்குத் தொந்தரவாகத் தெரியாது. தினமும் கேட்டுப் பழகிப்போய்விட்டது" என்றார். "குறட்டை விடுவது யார் உங்கள் மனைவியா?" என்று கேட்டேன்... "இல்லை சார் நான் தான் அது" என்று கூறிவிட்டு அசட்டுத்தனமாகச் சிரிக்கிறார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேசிய அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் ஜே.வி.பியை ஓரங்கட்டி விட முடியாது!

## விஜித ஹேரத் எம்.பி

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கமோ எதிர்க்கட்சியோ மேற்கொண்டால் அம் முயற்சிக்கு ஜே.வி.பி எவ்விதத்திலும் தடையாக இருக்காது என்று அக்கட்சியின் ஹம்பகா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி தொடர்ந்து உறுதியான சுயாதீன எதிர்க்கட்சியாக செயற்படும் என்றும் அவர் மேலும் கூறினார். "தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன" என்று வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பாக ஊடக மொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் கூறிய தாவது, தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்ப தற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் ஜே.வி.பி இந்தவிடயம் குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு ஜே.வி.பி எந்தவிதத்திலும் தடையாக இருக்காது. தேசிய அரசாங்கம் ஒன்று உருவாவதன் மூலம் ஜே.வி. பியை அரசியல் செயற்பாடுகளில் இருந்து யாராலும் ஓரங்கட்ட முடியாது. நாங்கள் பலமான எதிர்க்கட்சியாக செயற்படுவோம்.

இதேவேளை, இலங்கையில் தேசிய அரசாங்கம் என்பது வெறும் பகல் கனவாகவே இருக்கும் என்பது ஜே.வி.பியின் அசையாத நம்பிக்கையாகும். சுதந்திரத்தின் பின்னர் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இந் நாட்டில் எத்தனையோ தடவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றும் நிறைவேறவில்லை.

எனவே தேசிய அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகள் சாத்தியப்படாது என்பது நிச்சயமாகும். ஒரு வேளை தேசிய அரசாங்கமொன்று உருவாகினாலும் அது ஜே. வி.பியின் அரசியல் செயற்பாடுகளை எவ்விதத்திலும் பாதிக்காது என்றார். (கு)

# படையினரின் ஆதரவுடன் ஆயுதக்குழுக்கள்

## வவுனியாச் சம்பவங்கள் இதனை உறுதிப்படுத்துவதாக கண்காணிப்புக் குழுவிடம் ஞானம் முறைப்பாடு

(தாண்டிக்குளம்)

வவுனியா பண்டாரிக்குளம், உக்குளாங்குளம் ஆகிய இடங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் நடத்திய தாக்குதலில் ஒரு சிறுவன் உட்பட 3 பேர் காயமடைந்தமை தொடர்பாகவும் உக்குளாங்குளத்தில் திருமண வைபவம் நடைபெற்ற வீடு ஒன்றினுள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி பெறுமதிமிக்க தங்கநகைகளை இந்தக் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றமை குறித்தும் விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.ஞானம் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் கவனதிற்குக் கொண்டு வந்துள்ளார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பொலிஸாரின் சிவில் நிர்வாகம் நடைபெறும் பகுதிக்குள் ஆயுதம் தாங்கிய குழுவினரின் செயற்பாடுகள் பகிரங்கமாக இடம்பெற்று வருவதை இந்த சம்பவம் தெளிவாக சுட்டிக்காட்டுவதாகவும் அவர் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளார்.

அண்மைய வாரங்களில் வவுனியா பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைகள், வர்த்தகர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றின் மூலம் வவுனியா மாவட்டத்தில் அரச படைகளின் ஆதரவுகளுடன் ஆயுதக்குழுக்கள் இயங்கி வருவதை எடுத்துக்காட்டுவதாக தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ள ஞானம், இந்தக் குழுக்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாலையில் மக்கள் நடமாட்டம் மிகுந்தவேளையில் பகிரங்கமாக இராணுவச் சீருடையில் தன்னியக்க துப்பாக்கிகள் சகிதம் வந்து கொள்ளையில் ஈடுபட்ட ஆயுதம் தாங்கியவர்களின் செயற்பாட்டை தாங்கள் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (கு)

# ஊழல் மோசடிகளை கண்டறிய விசேட பொலிஸ் பிரிவு அமைப்பு

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்றுவரும் ஊழல் மோசடிகளை துரிதமாக கண்டுபிடிக்க விசேட பொலிஸ் பிரிவொன்றை அமைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய பொலிஸ்மா அதிபரின் தலைமையில் விசேட புதிய பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு வருடகாலமாக தடைப்பட்டு வந்த தேசிய வருமான வரித்திணைக்களத்தில் இடம் பெற்றுள்ள 387கோடிக்கும் மேற்பட்ட தொகை மோசடி செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதி பணித்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக அவர்களது தராதரம் பார்க்காமல் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சட்டமா அதிபரையும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

அரசாங்க திணைக்களங்களில் இடம்பெறும் நிதி மோசடிகள் குறித்து விசேட பொலிஸ் பிரிவிற்கு 24 மணி நேரமும் தகவல் கொடுக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். 0112- 422176 அல்லது 0112-328243 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ அல்லது 0112-446174 என்ற பக்ஸ் இலக்கத்தின் ஊடாகவோ விசேட பொலிஸ் பிரிவிற்கு தகவல்களை வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (கு-9)

# கலைமாணி இறுதிப் பரீட்சை

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை பிரிவு, இவ்வாண்டுக்கான இறுதி கலைமாணிப் பரீட்சையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி நடாத்தவுள்ளது. கடந்த காலங்களில் இப் பரீட்சை கண்டி மாநகரில் மட்டுமே நடைபெற்று வந்தது. ஆனால் அண்மைக்காலமாக கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, மாத்தறை ஆகிய 04 நகரங்களில் இப் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு முதற்கலைத்தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் இவ்விறுதிப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் இம்மாதக் கடைசியில் அனுப்பிவைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாணவர்களில் பெரும்பாலானோர் மட்டக்களப்பு பரீட்சை நிலையத்தில் தோற்றுவர். இது இப் பிரதேச மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும் என பரீட்சார்த்திகள் கூறுகின்றனர். (கு-9)

# தபால் மூல வாக்களிப்புக்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட இரண்டு தினங்களில் தபால் மூல வாக்களிப் பில் கலந்து கொள்ள முடியாமல் போன அரசாங்க ஊழியர்களுக்கு தேர்தல் இடம்பெறும் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் டபிள்யு வீ. சுமண சிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வாக்களிக்கப்பட்ட தபால் மூல வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பாதுகாக்கப்பட்ட பொதிகள் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கான தபால் மூல வாக்குச்சீட்டு பொதிகளை பாதுகாப்பாக வைக்குமாறு மாவட்ட தேர்தலை உறுதிப்படுத்தும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தூரப்பகுதிகளில் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களை அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதித் தேர்தல் ஆணையாளர் மேலும் கூறினார். (கு-9)

# வடக்கு - கிழக்கைப் பிரிக்க 7 கட்சிகள் இணைந்து புதிய அமைப்பு உருவாக்கம்

வடகிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கென ஏழு கட்சிகளை இணைத்து கிழக்கு மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் சுவிசிறிபாய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டத்தின் போதே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது என்று அவ்வமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடகிழக்கு மாகாணத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களாக பிரிக்கப்பட்ட வேண்டும். அதற்காக ஏழு கட்சிகளின் பிரதிநிதிகளை கொண்ட புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு எனும் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு கிழக்கு மாகாண மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல் தாக்குதல், கடத்தல் சம்பவங்களுக்கு எதிராகவே செயல்படும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் மக்களின் எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் கைச்சாத்திடப்பட்டது.

எனினும் அவ்வொப்பந்தத்தின் மூலமாக எவ்வித மான பிரயோசனமும் இல்லை என்று இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர். இந்த அமைப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், தேசிய காங்கிரஸ், தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு, ஐக்கிய ஜனநாயக அமைப்பு பிரதிநிதிகளே கலந்து கொண்டனர்.

ஐ.தே.க., மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, சிஹல தேசிய சங்கம், தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்ட போதும் தவிர்க்கமுடியாத காரணத்தால் இக் கூட்டத்தில் சமுகமளிக்க முடியவில்லை என்று அவர்கள் அறிவித்துள்ளனர் என அவ் வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

# திருமலையில் தொடரும் தாக்குதல்கள்; துரைரட்ணசிங்கம் எம். பி கண்டனம்

(திருகோணமலை)

திருகோணமலை கடற்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாக கடலோரக் கிராமங்கள் மீதான கடற்படையினரது தாக்குதல்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைரட்ணசிங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சூடைக்குடா, கோணித்தீவு, சம்பூர், கடற்கரைச்சேனை ஆகிய கடலோரக் கிராமங்களில் 2ஆம் நாளாக கடந்த செவ்வாய்க் கிழமையும் கடற்படையினர் தொடர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் சம்பூர் மகாவித்தியாலய மாணவர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் அச்சத்துடன் வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடற்படையின் தாக்குதலினால் செல்களும் ரவைகளும் பழைய சூடைக்குடா கிராமத்திலிருந்து 200மீற்றர் தொலைவில் மீள அமைக்கப்பட்ட சூடைக்குடா கிராமத்தில் விழுந்துள்ளன. ஆழிப்பேரலையில் பாதிப்புற்ற சூடைக் குடா கிராம மக்கள் அனைவருமே அங்கிருந்து வெளியேறியவர்கள்.

பொதுமக்கள் மீதான விரும்பத்தகாத இந்தத் தாக்குதலை நிறுத்த அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச படைகளின் இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தாவிட்டால் அமைதி முயற்சிகள் பாதிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் துரைரட்ணசிங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)

# வடக்கு-கிழக்கில் தேர்தல் ஒத்திவைப்பு; முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது அநீதியானது. அனைத்து ஜனநாயக நடைமுறைகளுக்கும் எதிரானது.

தேர்தலை ஒத்தி வைக்கும் முன்பாக அப்பிரதேச பெரும்பான்மை இனமக்களுடன் கலந்து ஆலோசனை நடத்தி இருக்கவேண்டும்.

வடபகுதியில் தமிழர்கள் பெரும்பான்மையினராக இருந்தாலும் கிழக்கில் நிலைமை அப்படியில்லை. சிங்களவர்களும் முஸ்லிம்களும் கிழக்கில் பெரும்பான்மையினராக உள்ளனர்.

ஆகையால் கிழக்கில் தேர்தலை ஒத்திவைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படி கோரிக்கை விடுக்க முடியும்?

தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான தமது நிலைப்பாட்டை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளோம்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவையும் விரைவில் சந்திக்கவுள்ளோம்.

கிழக்கில் உள்ளூராட்சி சபைகள் இயங்காது போனால் [illegible] னாலும் ஆழிப்பேரலை[illegible]லும் பாதிக்கப்பட்ட அப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு மற்றும் மீளமைப்புப் பணிகள் முடங்கிவிடும்.

ஆகையால் இந்தப் பணிகளை முன்னெடுக்க உரிய அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டியது அவசியம் என்றார் ஹக்கீம். (க-9)

## கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்க 27ஆவது பொதுக் கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தினைத் தொடர்ந்து இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் க. பாலசுப்பிரமணியம், இடமாற்றத்தில் சென்ற நூலகர் பொ. ரவீந்திரன் ஆகியோருக்கு பிரிவுபசார வைபவமும் இடம் பெறும்.

மேலும் கணக்கறிக்கைகள், ஆண்டறிக்கை, புதிய உத்தியோகத்தர் தெரிவு ஆகியவற்றோடு சங்க உறுப்பினர்களுக்கான பொதி-கைமாற்றும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

(க-21)


## பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடங்கள்

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இரு பாலாரிடமிருந்தும் குடா நாடு அளாவிய ரீதியில் பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருத்தமானவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்போது வசிக்கும் முகவரி (இருப்பின்), தேசிய அடையாள அட்டை இலக்கம், பால், பிறந்த திகதி, கி.சே.பிரிவு, பிரதேச செய்தியாளர் பிரிவு, தனிப்பட்ட வரா, திருமணமானவரா? கல்வித்தகைமை, மேலதிக தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் உறவினர் அல்லாத, தங்களைப்பற்றி விசாரிக்கக்கூடிய இரு வரின் பெயர் விலாசங்களுடன் கூடிய விண்ணப்பங்களை,

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 31.03.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரதேச செய்தியாளர் பதவி'' எனத் தவறாது குறிப்பிடவும்.

## பதவி வெற்றிடங்கள்

உதவி ஆசிரியர் (பெண்கள் –பகல்), அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள் – பகல்), பாதுகாப்பு உத்தியோகத்தர், பத்திரிகை விநியோகஸ்தர்கள், உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவி ஆசிரியர், அலுவலகச் செய்தியாளர்கள் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்த பட்சம் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இத் துறையில் குறைந்த பட்சம் 3வருட அனுபவம் உடையவர்களாக, அல்லது க.பொ.த.(உ/த) இல் வர்த்தக பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும். வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங் கள் 31.3.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல்,

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

விண்ணபங்களை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.


# அனுமதியின்றி சாராயம் விற்ற இருவருக்கு அபராதம் விதிப்பு

(துன்னாலை)

அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் சாராயம் விற்ற இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் அபராதம் விதித்தது.

வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த இவ்விருவரும் வீட்டில் அனுமதிப்பத்திரமின்றி விற்பனைக்காக சாராயத்தை வைத்திருந்தவேளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

அத்துடன் பொலிஸார் அவர்கள் இருவரையும் கடந்த புதன் கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதி க. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அப்போது இருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதேவேளை, மேற்படி சாராயம் விற்ற ஒருவருக்கு ஏற்கனவே இவ்வாறான குற்றம் தொடர்பாக வழக்கொன்று இருந்தமையால் 20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அவ் அபராதத்தை செலுத்தத் தவறின் 6 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேபோல் மற்றைய நபருக்கு மேற்படி குற்றத்திற்காக 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத்தினை செலுத்தத் தவறின் 4 மாத காலம் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி இருவரும் தமது குற்றப்பணத்தை செலுத்தியதையடுத்து விடுதலை செய்யப்பட்டனர். (க-101)


அமரர் திரு சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக
வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்
இணைந்து நடாத்தும் மாவட்ட ரீதியிலான

## கரப்பந்தாட்டச் (செற்-அப்) சுற்றுப்போட்டி-2006

போட்டி நிபந்தனைகள்:-

01. பங்குபற்றும் அணி பந்து கொண்டுவருதல் வேண்டும்.
02. குறிப்பிட்ட நேரத்துக்கு 15 நிமிடம் முன்னதாக மைதானத்தில் சமுகமளித்திருக்கவேண்டும். தாமதமாகவரும் அணிக்கு 15 நிமிட அவகாசம் அளிக்கப்படும் அதற்குள் சமுகமளிக்காது விட்டால் எதிரணிக்கு வெற்றி அளிக்கப்படும்.
03. போட்டி சம்பந்தமாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
04. போட்டிகள் A,B என இரண்டு பிரிவாக லீக் முறையில் நடைபெற்றுசுற்றில் இரண்டு பிரிவிலுமிருந்து புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்ற இவ்விரண்டு கழகங்கள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும். அரை இறுதிப்போட்டி விலகல்முறையில் நடைபெறும்.
05. வெற்றி பெறும் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணத்துடன் பணப் பரிசும் வழங்கப்படும்.

25.03.2006 :- விண்ணப்ப முடிவு

விண்ணப்பிக்கும் முகவரி–

தலைவர், வீனஸ் வி. கழகம் ஆவரங்கால் கிழக்கு,
மணற்பகுதி, புத்தூர்.
மேலதிக விபரங்கள் தேவைப்படின் தலைவர்,
செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

ஊடக அனுசரணை : வலம்புரி–சங்குநாதம்




## தவக்கால சிந்தனை

"கடவுளே! உமது திருவுளம் நிறைவேற்ற இதோ வருகின்றேன்"

சரியான கேள்விக்கு சரியான பதில் சட்டத்தின் நிறைவு அன்பே! கடவுளை அன்பு செய் மனிதனை அன்பு செய். இதைவட மேலான சட்டமில்லை. நமது கண்களுக்கு உண்மையான சட்டம் இயேசுவே! அவரை விட மேலான சட்டமில்லை. காரணம் அவரைவிட மேலாகத் தந்தை இறைவனை அன்பு செய்தவர் யாரு மில்லை. தந்தை இறைவனோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவர். அவரை விட மேலாக மனிதரை நேசித்தவரும் இல்லை. மனிதனுக்காக தன்னுயிரைத் தந்தார். இரத்தம் சிந்தினார். சிலுவை ஏற்றார். நமது இதயம் துடிப்பதும் மூச்சின் சுவாசமும். நினைககின்ற நினைவும் செய்கின்ற செயலும் கடவுளையும் மனிதரையும் அன்பு செய்வதற்காகவே. இதனை உணர்ந்து வாழ்வாக்கும் மனிதன் கடவுளின பார்வையில் அவரது பிரியத்துக்குரியவன் ஆகிறான். காவலன்

# மாவின் விலை மேலும் 2 ரூபாவால் அதிகரிக்கும்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 3 மாதங்களில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளதால் மக்களின்வாழ்க்கை செலவினமும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கருத்துத் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு, கோதுமை மா, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கடந்த சில மாதங்களில் உயர்ந்துள்ளன.

இந்த விலை உயர்வை முடிந்த அளவு கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சமையல் எரிவாயு இறக்குமதிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் சர்வதேச சந்தையில் விலை அதிகரிக்கும் போது விலை அதிகரிப்பை சமாளிப்பது என்பது சிக்கலாக இருக்கும் என்று குறிப்பிட்ட அமைச்சர்,

கோதுமை மாவின் விலை மீண்டும் கிலோவுக்கு 2 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது என்றும் கோதுமை மா இறக்குமதிக்கு அனுமதி கிடைத் தால் இந்த விலையுயர்வை கட்டுப்படுத்தலாம் என்றும் தெரிவித்தார். (க-9)

# முதியோர் இல்லம் அமைக்க பொதுமகன் காணி அன்பளிப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் முதியோர் இல்லம் அமைப்பதற்கு பொது மகன் ஒருவரால் 4 பரப்புக் காணி பொலிகண்டியில் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை, அக் காணியில் முதியோர் இல்லம் அமைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சமூக சேவை உத்தியோகத்தர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி கட்டடம் அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(க-35)

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 92

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



அகிலத்தைத் தனது பெயரில் அடக்கியுள்ள நாயகியான இவர் 'ரோஜாக் கூட்டத்தில்' புகழ் பெற்றவர். இவரை உங்களுக்குத தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 92**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி;**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில மூன்று போட்டியாளாகளுக்கு குலுககல முறைமூலம தெரிவுசெய்யபபட்டு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 92

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................


அனுப்புபவரின் முகவரி :-..........................

..........................

..........................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 90
### சரியான விடை





இயக்குநர் பாரதிராஜா

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 90 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | வே.விஜய்<br>பலாலி றோட்,<br>திருநெல்வேலி,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :- | நா.இந்திராணி<br>கரவெட்டி கிழக்கு,<br>கரவெட்டி. |
| மூன்றாம் பரிசு | :- | சி.கோவிந்தராஜன்<br>423, பருத்தித்துறை வீதி,<br>நல்லூர்,<br>யாழ்ப்பாணம். |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

நா.மாலினி, திருநெல்வேலி. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். இ.அமிர்தவர்சினி, இணுவில். யெ.விஸ்வினி, குருநகர். சி.யூஜினா மரியா, குருநகர். வே.குமாரசுவாமி, கரவெட்டி. நா.ஜொஜீபன், மானிப்பாய். க.கபிலன், நீர்வேலி. திருமதி S.பாக்கியநாதன், சங்கானை. ம.சர்மினி, கோண்டாவில். இ.அருந்தவநாயகம், சாவகச்சேரி. லோ.கார்த்திகா, கந்தர்மடம். வி.ஆர்.லோகன், கொட்டடி. நா.நித்தியானந்தன், பிறவுண் வீதி. ம.சுரேகா, நாவலர் வீதி.

## தண்ணீருக்கு 'தண்ணி' காட்டிய கமரா

கமராவுக்குத் தண்ணீரில் கண்டம். ஏனெனில் வெளியில் எடுத்துச் செல்லும்போது மழையில் நனைந்தாலோ அல்லது கைதவறித் தண்ணீரில் விழுந்தால் போதும். ஒன்று செயல்பாட்டை இழந்துவிடும். அல்லது முன்பு போல் சரிவர இயங்காது.

இதனால் கமராவை வெளியில் கொண்டு செல்லும் போது




அதனைப் பாதுகாக்கவே தனிக்கவனம் செலுத்த வேண்டும். தென் கொரிய விஞ்ஞானிகள் தண்ணீருக்கு உள்ளேயும் இயங்கும் கமரா ஒன்றைக் கண்டுபிடித்துத் தண்ணீர் கண்டத்துக்குப் பரிகாரம் தேடிவிட்டார்கள்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் இயங்கக்கூடிய இந்தக் கமராவுக்கு எம்.ஜேயூ -720 என்று பெயரிட்டுள்ளனர். இந்தக் கமராவுக்குள் தண்ணீர் எளிதில் உள்ளிறங்காதபடி இதன் உடல் அமைப்பு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. தண்ணீருக்குள் மணிக்கணக்கில் கிடந்தாலும் கமராவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இந்தக் கமரா டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இயங்கும் என்பதால் தண்ணீருக்குள்ளும் படம் பிடிக்கும் தன்மை கொண்டது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள நுட்பமான லென்ஸ் தரமான படங்களை எடுக்க உதவுகிறது. தண்ணீருக்கு தண்ணி காட்டும் இந்த நவீன கமரா தென் கொரிய கடைகளுக்கு விற்பனைக்கு வரவுள்ளது.

ஆனால் இந்த கமராவை தயாரித்த நிறுவனம் பார்வையாளர்கள் மத்தியில் அறிமுகப்படுத்திய அன்றே இதற்கு வரவேற்பு அதிகமிருந்ததாம். இதனால் உலகம் முழுவதும் விற்பனைக்குக் கொண்டுவர இந்த கமரா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் விலை 66 ஆயிரம் ரூபாய்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-96




*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 96**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி',**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ..........................

முகவரி :- ..........................

..........................

..........................

இங்கே வெட்டுக ---------------------------- ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)இதனால் நாட்டில் அழிவு ஏற்படும். (4)இது பெறுதற்கரியது என்பர். (5)கல், உலோகம் ஆகியவற்றினால் இவை செதுக்கப்படும். (6)பெண்களின் இந்த உடல் பகுதி உடுக்குப்போல் அமைவது அழகுதரும் என்பர். (7)கட்டளை - இப்படியும் கூறுவர். (9)அரண்மனையில் பெண்களுக்கான பிரத்தியேக இடம்.

### மேலிருந்து கீழ்

(1)பெண்களை இப்படியுமழைப்பர். (2)செம்மை - இதனைக் குறிக்கும். (3)இதனைக் கடைப்பிடித்துப் பெருமை கொள்ள வேண்டும். (6)தொடர்பு. (8)இசைக்கருவிகளிலொன்று. (10)இடையூறு (கீ.மே)

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 94 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

| | | | |
|---|---|---|---|
| 1.சுதந்திரம் | 5.கண் | 6.ரேலங்கி | 8.கோல் |
| 9.தகைமை | 11.வேலி | 13.சூது | 15.தணி |
| 17.சூர்ப்பனகை | 18.மாடு/ஆடு | 19.தம்புரா | |

### மேலிருந்து கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1.சுகந்தம் | 2.தண்டிகை | 3.திகில் | 4.ரங்கோலி |
| 7.ரேகை | 10.மைசூர் | 12.வேதனம் | 14.துப்பு |
| 16.தணிகை | 17.சூடு | | |

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | ஆர்.சஞ்சய்<br>அம்பலவாணர் அரங்கு,<br>புங்குடுதீவு. |
| இரண்டாம் பரிசு | :- | கே.கவிராஜ்<br>6ஆம் வட்டாரம்,<br>நயினாதீவு. |
| மூன்றாம் பரிசு | :- | யோ.சிவாஜினி<br>சரசாலை தெற்கு,<br>சாவகச்சேரி. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:

ம.மைதிலி, கோண்டாவில். அ.கணேசராசா, நீர்வேலி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. க.ஞானோதயன், கோப்பாய். இ.யூஜினா மரியா, குருநகர். பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. இ.ஏரம்பமூர்த்தி; கோப்பாய். J.C.யெறால்ட் போட், குருநகர். ப.சிவசூரியர், சங்கானை. வ.மன்னர் அன்ரனி, குருநகர். இ.குலசிங்கம், நயினாதீவு. ஏ.வாசவி, அரியாலை. சி.சங்கீதா+ சம்பூரணி, வட்டுக்கோட்டை. க.அஸ்வினி, சித்தன்கேணி. செ.ஆகாஷ், இருபாலை. லோ.கீர்த்திகா, யாழ்ப்பாணம். சொ.நித்தியா, கொக்குவில்.

## கைக்கு அடக்கமான கொம்பியூட்டர்



கொம்பியூட்டர்களின் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில் புதிய தொழில்நுட்பம் மற்றும் அதி நவீன வசதிகளுடன் கொம்பியூட்டர்களைத் தயாரிப்பத்தில் முன்னணி நிறுவனங்கள் ஆர்வம் காட்டுகின்றன.

கொரியாவைச் சேர்ந்த சாம்சங் நிறுவனம் புதிதாக ஒரு கைக்கு அடக்கமான லப் -டப் கொம்பியூட்டர் ஒன்றை வடிவமைத்துள்ளது. உள்ளங் கைக்குள் அடங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கொம்பியூட்டரை செல்போன் ஆகவும் பயன்படுத்தலாம். இதன் திரை அளவு 7 அங்குலம் கொண்டது. 40 ஜி.பி.சேமிப்பு திறன் கொண்டது. இதைப் பயன்படுத்தி செல்போன் போல பேசலாம். கொம்பியூட்டர் பயன்படுத்துவது போலவும் இதை இயக்கலாம். இதன் மூலம் மின் அஞ்சல்கள் அனுப்புதல் - பெறுதல் மற்றும் இணையத் தளங்களைப் பார்வையிடுதல் போன்ற பணிகளைச் செய்யலாம். தற்போது சந்தையில் உள்ள லப் -டப் கொம்பியூட்டர்களில் உள்ளது போன்ற வசதிகள் இதில் உள்ளது என்பதால் இந்தத் தயாரிப்புக்கு வரவேற்பு இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# ஆன்மீகப் பாதை

## பிறந்த மண்

பரம்பொருளினின்று பிரபஞ்சத்தை வேறொன்றாகப் பிரித்துக் காட்டுபவரும், இந்தப் பிரிவினையை நீக்கிப் பிரபஞ்சத்தைப் பரம்பொருளுடன் இரண்டறக் கூட்டு பவளுமானபராதேவதையின் அருள் விலாசம் சிறப்புறத் துலங்கும் மாநகரம் கல்கத்தா.

காலத்தின் கோலத்தினால் புராதனபாரதப்பண்புகள்படுகுழியுற்று, சென்ற நூற்றாண்டில் மேனாட்டு வாழ் முறைகள் இந் நாட்டில் வேர் செலுத்தத் தொடங்கிய போது, அந்த வேரினைக் களைந்து, மீண்டும் வேதாந்தத்துக்கு வித்திட்ட வித்தகராம் விவேகானந்த சுவாமிகள் அவதரித்தது இந்தக் காளி மாதாவின் திருத்தலமாகிய கல்கத்தாவில்தான்.

கல்கத்தாவின் வட பகுதியிலுள்ள சிம்லாவில் காயஸ்த க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த தத்தர் குடும்பம் மிகவும் பிரசித்தி பெற்றது. செல்வம், கல்வி, ஈகை, சுதந்திரமான சிந்தனை எல்லாவற்றுக்குமே தத்தர் குடி நற்பெயர் எடுத்திருந்தது.

இந்தப் பெருங்குடியில் பிறந்த பெருமகனாகிய ராமமோகன தத்தர் ஆங்கில வழங்கறிஞர் ஒருவரின் கூட்டாளியாகப் பணியாற்றி வந்தார். ஏராளமான செல்வத்தை மட்டுமன்றி, அந்தச் செல்வத்தைக் கொண்டு போஷனை செய்வதற்காக ஏராளமான சுற்றத்தினரையும் தம் குடும்பத்தில் வைத்துப் பரிபாலித்து அமோகமாக வாழ்ந்தவர் ராம மோகனர். அவருக்கு இரண்டு புதல்வர்கள். ஒருவர் காளி பிரசாத்; மற்றவர் துர்கா சரணர். துர்கா சரண தத்தரின் பேரர்தான் சுவாமி விவேகானந்தர்.

துர்கா சரணர் துறவறத்திலேயே மனதைச் செலுத்தியவர். சமஸ்கிருதம், பாரசீகம் இரு மொழிகளிலும் தேர்ச்சிபெற்ற அவர். இந்தப் பரம்பரையில் சுவாமிஜி பிறக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான் சில ஆண்டுகளேனும் இல்லற வாழ்வு நடத்தினார் போலும்! ஓர் ஆண் மகவுக்குத் தந்தையான பின் தமது இருபத்தைந்தாவது பிராயத்திலேயே வீட்டை விட்டு வெளியேறினார் அவர்.

துர்கா சரணரின் புத்திரனான விசுவநாதன் வளர்ந்து வந்தான். இல்லற வாழ்வு என்ற மாளிகையின் தலைவாயிலிலேயே தலைவராய்தனித்துவிடப்பட்டாலும்துர்கா சரணரின் மனைவி மனம் கலங்காது மகவை வளர்த்து வந்தாள். விசுவநாதனுக்கு மூன்றாவது வயது நடந்து கொண்டிருந்த போது அவள் காசி விசுவநாதனைத் தரிசிப்பதற்காகக் குழந்தையுடன் வாரணாசிக்கு யாத்திரை புறப்பட்டாள்.

புனித காசியிலுள்ள ஆலயங்கள் தோறும் சென்று தொழுதாள் விசுவநாதனின் தாய். ஒருநாள் கங்காநதியில் நீராடிவிட்டு விசுவநாதன் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த அவள் சாலையில் தடுக்கி விழுந்து மயக்கமடைந்து விட்டாள். மயக்கம் தெளிந்த போது அவள் கண்முன், அவளது முகத்தையே கவலையுடன் நோக்கிக் கொண்டிருந்தவள்அன்புமுகத்தைக்கண்டாள்.

ஆஹா! அவளுடைய பதிதுர்கா சரணர்அல்லவாஅது! முன்பு அவள் இழந்த கணவனை விசுவேசுரன் இன்று அவளிடம் மீண்டும் சேர்த்து விட்டானோ? அவள் இப்போது கிடப்பதும் கூட ஆலயத்தின் படிகளில்தான். தெருவில் மயங்கிக் கிடந்த அவளை அவளுடைய கணவர் தான் தூக்கிவந்து இங்கே கிடத்தி மயக்கம் தெளி வித்திருக்கிறார். அவரையே ஆர்வமுற நோக்கினாள் அவள்.

'விசுவநாதா, விசுவநாதா' என்று அவளுடைய மனம் கூவிற்று

### அத்தியாயம் - 01

இது விசுவநாதனின் செய லில்லை என்பது போல 'மாயை, மாயை' என்று இரு முறை முணு முணுத்தார் துர்கா சரணர். அவளு டைய கண்களில் கொழிந்த ஆர்வம் அடங்கிற்று; அமைதி நிறைந்தது. அவர் மட்டும் தானா தன்னைத் துறந்து சன்னியாசியாக வாழ்ந்தார்? நானும் அவரைப் பிரிந்து சன்னியாசினியாக வாழ்ந்தேன் அன்றோ? இருவருடைய சன்னியாசமும் இன்று ஏன் குலைய வேண்டும்? என்று அவளுடைய எண்ணங்கள் ஓடின. அவள் தன் பாட்டில் எழுந்திருந்து திருக்கோயிலைப் பிரதட்சிணம் செய்யத் தொடங்கினாள் துர்கா சரணரும் திரும்பிக் கூடப் பாராமல் தமது சன்னியாச யாத்திரையை மீண்டும் ஆரம்பித்துவிட்டார்.

எங்கே போகவேண்டும், எங்கே போகிறோம் என்ற யோசனையேயின்றி, கால்போன வழியில் சென்று கொண்டிருந்த துர்கா சரணர் பல ஆண்டுகளுக்குப்பின் தற்செயலாகக் கல்கத்தாவை அடைந்தார். அங்குள்ள தமது பூர்வீக மான பெருமாளிகையை அவர் நினைந்தாரில்லை. தன்பழைய நண்பரொருவரையே சென்றடைந்தார் அவர். அந்த நண்பர் சும்மாவிருக்கவில்லை. தம்முடைய சந்தோஷ மிகுதியில் துர்கா சரணருடைய இல்லத்தினருக்கு அவருடைய வருகையை அறிவித்துவிட்டார். உடனே அவருடைய உறவினர்கள் வந்து துர்கா சரணரை பல பந்தப்படுத்தி தங்கள் வீட்டுக்குத் திருப்பி அழைத்துவந்தனர். அவரை ஓர் அறைக்குள் இருக்குமாறு நிர்ப்பந்தம் செய்து, அறையைப் பூட்டியும் விட்டனர். துர்காசரணரோ இம்மியும்அசைந்து கொடுக்கவில்லை நன்றாகக் கனிந்த விளாம்பழத்தை ஓட்டுடன் ஒட்டிக்கொள்ளச் செய்ய முடியுமா, ஓட்டுடன் ஒட்டாத விளாங் கனியா கவே இருந்தார் துர்கா சரணர். மூன்று நாட்கள் ஆயின. துர்கா சரணரோ ஒரு பருக்கையைக் கூடக்கையால் தொடவில்லை. உறவினர்பயந்தனர். 'இப்போது இந்தக் குடும்பத்துடன் தொடர்பில்லாவிடினும் அவர் உயிருடன் இருக்கிறார் என்றாவது ஆறுதல் கொள்ளலாம். அவரை இல்லறத்துக்குத் திருப்ப முயன்றால் அவருடைய உயிருக்கே அல்லவா ஆபத்துநேரிடும்போலிருக்கிறது?' என்று எண்ணினர். அறையின் பூட்டைத் திறந்து விட்ட னர்.

அவ்வளவுதான், கூண்டைத் திறந்தவுடன் பட்சி பறப்பது போல் துர்கா சரணர் வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்டார். அதன்பின் அவரைப் பற்றி யாரும் எதுவும் கேள்விப்படவில்லை.

பெருமை வாய்ந்த தத்தர் குடிக்குப் பெருமையூட்டுபவனாக வளர்ந்தான் விசுவநாதன். அப்பா போன போக்குக்குப் பிள்ளையாவது போகமும் போக்கியமுமாக வாழ வேண்டுமே என்று சுற்றத்தினர் வேண்டி விரும்பியவாறே ஒரு குறைவுமின்றிக் கல்வி கேள்விகளை முடித்து கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞரானார் விசுவநாத தத்தர். நீதிமன்றம் நிதிமன்றமுமாக இருந்து அவரிடமும் செல்வத்தைக் குவித்தது. கட்சிக்காரர்கள் பல பகுதிகளிலிருந்தும்அவரை வந்தடைந்ததில் ஆச்சரியமில்லை. ஏனெனில் அவர் அறிவாளியாக மட்டுமன்றி மக்களின் மனப் பாங்குகளையும் உள்ளபடி அறிந்து அதற்கேற்ப நடக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். ஆங்கிலம் பாரசீகம் ஆகிய இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த விசுவநாத தத்தர் மக்களுடையமனதின் மொழியையும் கற்கப்பயின்றிருந்தார்.

மக்களின் மனநிலைகளை அறியப்பழகியிருந்த விசுவநாத தத்தர் எந்த இழிவான மனநிலையும் தோன்றுவது கூட சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகத்தான் என்று உணர்ந்து கடையரிடமும் அனுதாபம்காட்டி வந்தார். 'அற்றார் அழிபசி தீர்த்தல்' ஒன்றே தம்கடனாக கொண்டொழுகிய



விசுவநாத தத்தர் தமது ஈகையை சோம்பேறிகளுக்கும் குடிகாரருக்கும் கூடத்தயங்காது காட்டிவந்தார். இதைக்குறித்து பின்னர் ஒருசமயம் அவருடைய தவப்புதல்வர் நரேந்திரர் அவரைக்கண்டித்ததும் உண்டு. அதற்கு விசுவநாதர் மனித வாழ்க்கையின் ஆழ்ந்த இன்னல்கள் உனக்கு எவ்வாறு புரியும் அது புரியும் போதுதான் உனக்கு இந்த மக்களிடம் அனுதாபம் ஏற்படும். போதையில் தங்கள் உபாதைகளைத் தற்கால சாந்தியாக இழந்து இன்புறும் பேதையர் அல்லவா அவர்கள்? என்றார்.

(தொடரும்)

---

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்ததன் மூலம்
# வடகிழக்கில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே கட்சி கூட்டமைப்பு என்பதை அரசு ஏற்றுள்ளது
## ஜெயானந்தமூர்த்தி எம்.பி.

(மட்டக்களப்பு)

வடகிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்ததன் மூலம் வடகிழக்கில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

வடகிழக்கில் இன்னும் நிலைமை சீரடையவில்லை. போர் நிறுத்த ஒப்பந்தமும் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இந்நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது உசிதமற்றது என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினராகிய நாம் ஜனாதிபதியிடமும் தேர்தல் ஆணையாளரிடமும் சுட்டிக்காட்டியதுடன் கடுமையான எதிர்ப்பையும் காட்டினோம்.

அது மாத்திரமில்லாமல் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி சில புல்லுருவிகள் இத் தேர்தலில் மக்களை அச்சுறுத்தி கள்ள வாக்கு மூலம் உள்ளூராட்சி அமைப்புகளுக்குள் ஊடுருவக் கூடிய நிலையும் உள்ளது.

எனவே, இத் தேர்தல் தற்போதைய சூழ்நிலையில் நடத்தப்படுவது பொருத்தமற்றதாகும். அது மாத்திரமின்றி எமது வேட்பாளர்களுக்கு தம்மை ஜனநாயக அரசியல்கட்சி என்று கூறிக்கொள்பவர்கள் அச்சுறுத்தல் விடுத்தும் வந்தனர். எனவே, தேர்தலை பின்போட வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டது.

நாம் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அவர் இதற்கு இணக்கம் தெரிவித்ததுடன் தேர்தல் செயலகமும் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இதன் மூலம் எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பே வடகிழக்கில் பலம் மிக்க தமிழ் மக்களின் கட்சி என்பது நிரூபணமாகியுள்ளது என்றார். (க)

## விண்ணப்பம்கோரல்

(கொழும்பு)

இலங்கை இலக்கியப் பேரவையின் 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளுக்குரிய பரிசுக்கான நூல் தேர்விற்கு எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்வரை இலங்கை எழுத்தாளர்களால் இலங்கையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இலக்கிய ஆய்வு, நாவல், சிறுகதை, கவிதை, காவியம், சிறுவர் இலக்கியம், சமயம், நாடகம், அறிவியல் பல்துறை என பரிசுக்குரிய நூல்கள் தெரிவாகும்.

பாடநூல்கள் இவ் வரிசையில் அடங்காது. இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசுத் தேர்விற்காக ஏற்கனவே தம் நூல்களை அனுப்பி வைத்தவர்கள் புதிதாக அனுப்பத் தேவையில்லை.

இப் பரிசுத் தேர்விற்குத் தம் நூல்களை அனுப்பிவைக்க விரும்பு வர்கள் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கலாநிதி க.குணராசா தலைவர் இலங்கை இலக்கியப் பேரவை, 75/10 அ, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபாலிலோ ஒரு பிரதியை அனுப்பி வைக்க வேண்டும்.

பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படாத நூல்கள் இலக்கிய பேரவை நூலகத்தில் ஏற்கனவே கொள்வனவு செய்யப்படாதிருந்தால் அதற்கான பெறுமதி பதினைந்து சதவீதக் கழிவின் பின்னர் அனுப்பிவைக்கப்படும். (க-9)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவில், நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்து சமய வாழ்வியலில் பெண்களின் பங்களிப்பு எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவினை கதிரவேலு சிவயோகராணி நிகழ்த்தவுள்ளார். (க-132,133)

## ஜனாதிபதி மஹிந்த பாகிஸ்தான் விஜயம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்மாதம் இறுதியில் பாகிஸ்தானுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். இம்மாதம் 31ஆம் திகதி பாகிஸ்தான் செல்லவுள்ள ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிவரை பாகிஸ்தானில் தங்கியிருப்பார் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிக்கின்றது.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் பேரிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தின் போது இரு நாடுகளுக்குமிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து ஆராயப்படவிருப்பதுடன், அந்தநாட்டு வர்த்தக சமூகத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கு-7)

## விண்ணப்பம்கோரல்

'ரூம் டு ரீட்' என்ற அரச சார்பற்ற நிறுவனம் 2006ஆம் ஆண்டில் பிரசுரிப்பதற்கான சிறுவர்களிற்கான ஆக்கக்கதைகளை எழுதும் போட்டியினை நடத்தவுள்ளது.

போட்டிக்கான வழிகாட்டல்களாக எல்லா வயது மட்ட பாடசாலை மாணவர்களும் தனியாகவோ, குழுவாகவோ விண்ணப்பிக்கலாம்.

விளக்கப்படங்களுடனான கதைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. கதைகள் 3-10 வயதுப்பிரிவினருக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கவேண்டும். குழுவாகவோ தனிநபரோ விண்ணப்பங்களை இப்போட்டிக்கு அனுப்பலாம்.

கதைகள் வெளியிடப்படாத அசல் பிரதியாகவும், மொழி பெயர்க்கப்படாததாகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கலாம், 400-800 சொற்களிற்குட்பட்டதாக உறுதியான சமூகச் செய்திகளை கொண்ட கதைகள் விஷேட மாக ஊக்குவிக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பெயர், வயது, தரம், பாடசாலைப் பெயர் முகவரி, தொலைபேசி, மின்னஞ்சல் முகவரி ஆகியவை பூரணப்படுத்தப்பட்டதாக ஏப்ரல் 25ஆம் திகதிக்கு முன் நிகழ்ச்சி அலுவலர் 'ரூம் டு ரீட்' - இல 22 இனிஷியம் றோட், தெஹிவளை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

முதற் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் பாடசாலை நூலகத்திற்கென 400 சிறுவர் நூல்கள் கொண்ட பொதியும் அடைவுச் சான்றிதழும்,

இரண்டாம் பரிசாக 10ஆயிரம் ரூபா 200நூல்கள்கொண்ட பொதியும்அடைவுச் சான்றிதழும், மூன்றாம் பரி சாக 5 ஆயிரம் ரூபாவும் 100 நூல் பொதியும், அடைவுச் சான்றிதழும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

# உதிரிப் பாகங்கள் திருட்டு

(கொழும்பு)

சுங்கத் தீர்வை செலுத்தாத நிலையில் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சொகுசு வாகனத்திலிருந்து பெறுமதியான உதிரிப்பாகங்கள் களவாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கத் தீர்வை செலுத்தாத வாகனங்களை அரசுடைமை ஆக்கியதன் பின்னரே இந்த உதிரிப்பாகங்கள் திருடப்பட்டடுள்ளன.

இந்த சொகுசு வாகனங்களை அமைச்சரவைப் பத்திரமொன்றினூடாக அரசாங்க உயரதிகாரிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டதாகவும் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதே வாகனங்களின் உதிரிப்பாகங்கள் திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை திருடப்பட்ட உதிரிப்பாகங்களின் பெறுமதி சுமார் 50 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பிற்கு மத்தியிலிருந்த வாகனங்களிலிருந்து உதிரிப்பாகங்கள் திருடப்பட்டமை குறித்து சுங்க அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-9)

## மக்கள் வங்கிக் கிளையை திறக்க நடவடிக்கை

(நல்லூர்)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் வங்கிக்கிளை ஒன்றை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்பொழுது வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வங்களாவடியில் ஊர்காவற்றுறைக்குரிய இலங்கை வங்கிக்கிளை இயங்கி வருவதாக இலங்கை வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (க-134)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

(பருத்தித்துறை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் அருள் ஒளி மாசி மாதம் இதழ் வெளிவந்துள்ளது. (க-9)

வண்ணை வைத்தீஸ்வரர் கொடியேற்ற தினத்தையொட்டி இக் கவிதை பிரசுரமாகிறது

## கொடியவினை தீர்த்தருள்வாய் வைத்யநாதா

*கண்ணெதிரே காண்பதெல்லாம் அநித்யமென்று*
*கண்டுரைத்த மறையேட்டைக் கையிற்றாங்கி*
*எண்ணறிந்தும் எழுத்தறிந்தும் யாப்பால் நன்கு*
*இயற்று நிலை தனையறிந்தும் உடல் நோய் கண்டு*
*மண்ணகத்தே வாழ்கின்றா ரென்றாலந்த*
*மர்மமென்ன தர்மமிதா? மனம் நிறைந்தே*
*வண்ணைநகர் ஆலயத்தில் கொடியை ஏற்றி*
*கொடியவினை தீர்த்தருள்வாய் வைத்யநாதா!*

**கவிமணி கந்தமுருகேசதாசனார்**

# சடலம் அடையாளம் காணப்பட்டது

(கொழும்பு)

மட்டக்களப்பு வாவியடியில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டவர் வவுணதீவு கரவெட்டி வள்ளுவர் வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய வைரமுத்து அருள்பிரகாசம் என்று அவரது மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பதில் நீதவான் முன்நிலையிலும், சட்ட மருத்துவ அதிகாரி எம்.ஏ.ரகுமான் முன்நிலையிலும் அவர் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளார்.

சுட்டுக்கொலை செய்யப்பட்டவர் 9 ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஜெயந்தன் படையணியில் கடமையாற்றியவர் என்றும் அதன் பின்னர் இயக்கத்திலிருந்து விலகி விவசாயம், கூலி வேலை என்பவற்றில் ஈடுபட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

# சொத்து விபரச் சட்டத்தை சீராக அமுல்படுத்த புதிய சட்டம் தேவை

## ட்ரான்ஸ் பரன்ஸி நிறுவனம்

(கொழும்பு)

தற்போது அமுலிலுள்ள சொத்து விபரச் சட்டம் தொடர்பாக புதிய சட்டமொன்றின் தேவை ஏற்பட்டுள்ளதாக ட்ரான்ஸ் பரன்ஸி நிறுவனம் தெரிவிக்கின்றது.

தற்போதைய சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லையென்றும் அதனாலேயே புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டியிருப்பதாகவும் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சி.வெலியமொற தெரிவித்தார்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் சொத்து விபரங்களை வெளியிடுவதற்கான முறையில் புதிய சட்டம் இயற்றப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள சட்டத்தின் படி குறிப்பிடப்பட்ட சொத்து விபரங்கள் உரிய முறையில் வெளியிடப்படுவதில்லையென்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதனால் புதிய சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அடிப்படை விடயங்கள் குறித்து இலஞ்ச ஊழல் மோசடி குற்றத்தடுப்பு ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் வெலியமொற தெரிவித்தார். (க-7)

## 27ஆம் திகதிக்கு முன் நிவாரணத்தைப் பெறுக!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 2006 ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான இலவச உலருணவு நிவாரணம் கடந்த 6ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி மாதங்களுக்கான இலவச நிவாரண விநியோகம் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறுத்தப்படுவதால், உரிய பயனாளிகள் தமக்குரிய இலவச உலருணவு நிவாரணத்தினை உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (க)

# வேலைக்கான உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் ரின்மீன் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்டத்தின் வேலைக்கான உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 2005ஆம் ஆண்டு 87 வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கான ரின் மீன்கள் தற்போது ப.நோ.கூ.சங்கங்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வேலைநாட்களுக்கு ஒரு ரின் மீன் என்ற அடிப்படையிலேயே ப.நோ.கூ. சங்கங்களுக்கு மாவட்ட செயல்கத்தினால் ரின்மீன்கள் வழங்கப்பட்டுள்ளன. நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரின்மீன்களின் அளவு வருமாறு,

கமநல அபிவிருத்தித் திணைக்களம் 23 ஆயிரத்து 340, யாழ்.மாநகர சபை 4 ஆயிரத்து 67, வலிமேற்கு பிரதேச சபை 385, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 859, வேலணை பிரதேச செயலகம் 5 ஆயிரத்து 307, வலி தெற்கு பிரதேச சபை 272, ஊர்காவற்றுறை பிரதேச சபை 18 ஆயிரத்து 998, ஊர்காவற்றுறை உ.அ.அ. பணிமனை 2ஆயிரத்து 88, மானிப்பாய் பிரதேச சபை 3 ஆயிரத்து 289, சாவகச்சேரி பிரதேச சபை 34 ஆயிரத்து 170, வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை 523, நெடுந்தீவு பிரதேச சபை ஆயிரத்து 78, வல்வெட்டித்துறை நகர சபை ஆயிரத்து 254, வேலணை பிரதேச சபை 4 ஆயிரத்து 526.

மேற்படி ரின்மீன்களை காலம் தாழ்த்தாது உரிய பயனாளிகள் ப.நோ.கூ.சங்கங்க கிளைகளிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள் எனவும் 2005 ஆம் ஆண்டு வேலைக்கான உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சகல வேலைகளுக்குமான சகல உணவுப் பொருட்களும் உரிய ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது எனவும் வேலைக்கான உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய பயனாளிகள் உரிய அமுல்படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி உணவுப் பொருட்களையும், ரின்மீன்களையும் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (க)

# பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கான நன்கொடை

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கான 2ஆம் கட்ட கொடுப்பனவுக்கு இற்றைவரை சிபார்சு செய்யப்படாமலிருப்பவர்கள் தங்களின் வீட்டுப் பகுதி சேதத்தை நாளைய தினத்திற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டுமென்றும், 2006.03.31 இற்கு பின்பு இது தொடர்பான கொடுப்பனவு மேற்கொள்ளப்படமாட்டாதென்றும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

மேலும் பகுதிக் கொடுப்பனவில் முதலாவது கொடுப்பனவினை அண்மையில் பெற்றுக்கொண்டவர்களும் உடனடியாகத் தமது வேலைகளைப் பூர்த்தி செய்து தொழில்நுட்ப அலுவலர் மூலம் உறுதிப்படுத்தி தமது இறுதிக் கொடுப்பனவுகளையும் மேற்படி திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (க-52)

# பதிவு செய்யப்படாத பிறப்பை பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

'பிறப்புக்களைப் பதிவு செய்து மனிதனுக்கு மதிப்பளியுங்கள்' எனும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக சிறுவர்களின் பிறப்பைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை பதிவு செய்யப்படாத சிறுவர்கள், பாடசாலை மாணவர்களின் பிறப்பைப் பதிவு செய்யுமுகமாக துரித செயற்திட்டமொன்று வடக்கு வலய உதவிப்பதிவாளர் நாயகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இதுவரை தங்கள் பிறப்பு பதிவு செய்யப்படவில்லை எனக் கருதும் மாணவர்களும், தமது பிள்ளையின் பிறப்பைப் பதியவில்லையெனக் கருதும் பெற்றோர்களும், தமது பாடசாலையிற் கற்கும் மாணவர்களின் பிறப்பு பதியப்படவில்லையெனக் கருதும் அதிபர் ஆசிரியர்களும், பதியப்படாத பிள்ளையின் பெயர், தந்தையின் பெயர், தொடர்புகொள்ள வேண்டிய முகவரி என்பவற்றை பதிவாளர் நாயகத்திற்கு தபாலட்டை ஒன்றின் மூலம் தெரியப்படுத்தினால் அவரது பிறப்பை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

இவ் விபரங்களை பொதுநல மன்றங்களோ, நலன்விரும்பிகளோ கூடத் தமக்கு அனுப்பிவைக்கலாம் என வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார். (க)

## மீள்பார்வை

எதிர்வரும் 28.03.2006 முதல் உங்கள் வலம்புரியில்
தென்னாபிரிக்க மக்களின் விடுதலைக்காகப் போராடி
26 வருடங்கள் சிறைசென்று மீண்ட

## நெல்சன் மண்டேலா

அனைவரும் அறிய வேண்டிய அற்புதத் தொடர்
வாசிக்கத் தவறாதீர்,

வலம்புரியின் மீள்பார்வையில் இதுவரை நீங்கள் அறிந்தவை,

- தேச வழமை
- ஈழத்தமிழர் இறைமை
- இலங்கைப் பாராளுமன்றம்
- சதாம் உசேன்
- சந்தனக் கடத்தல் வீரப்பன்
- கிரிக்கெற் வீரர் சச்சின் டெண்டுல்கர்
- நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

# எவர் எதிர்த்தாலும் அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை வெளியேற்ற மாட்டோம்



## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

**சமாதானப் பேச்சுகளில் அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயை விலக்கக்கோரி எவர் எதிர்த்தாலும் நாங்கள் நோர்வேயை விலக்கிவிடப் போவதில்லை. இந்த நிலைப்பாட்டில் நாம் மிக உறுதியாகவே உள்ளோம். இவ்வாறு ஸ்ரீலங்காவின் அரச தரப்பு பேச்சுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையிலான சகல உறவுகளும் துண்டிக்கப்பட வேண்டும். நோர்வே பக்கச்சார்புடன் செயற்படுபவர்கள். அவர்களை விலக்கிவிட வேண்டும் என்றும் உடனடியாக நாட்டை விட்டு அனுப்பவேண்டும் எனவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மறுபுறம் தேசிய பிக்குகள் முன்னணி நோர்வேயை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுங்கள் என்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் நாம் செவிசாய்க்கவோ அல்லது இதனால் கலவரமடையவோ இல்லை.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. அந்த வகையில் ஒரு பிரச்சினை தொடர்பாக பலரும் பலவாறான கருத்துக்களை தெரிவிப்பதற்கு உரிமை உண்டு.

சில தரப்பினர் கோஷங்கள், ஆர்ப்பாட்டங்கள் எனப் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் எது சரியான கருத்தோ அதனையே அரசு உள்வாங்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை நோர்வே அனுசரணைப் பணி குறித்த ஜே.வி.பி பிரசார செயலாளர் விமல் வீரவன்ச நோர்வேயை உடனே வெளியேற்ற வேண்டும். மறுத்தால் அரசுக்கு வழங்கும் ஆதரவு பற்றி மீள் பரிசீலனை செய்வேண்டி வரும் எனக் கடுமையாகக் கருத்துக்களை அரசுக்கு எதிராகத் தெரிவித்து வருகின்றார்.

இந்த நிலையில் அரசுக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான உறவு நிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் நோக்கர்கள், உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் இந்த விரிசல் பெரிதாகக் கூடும் என ஆருடம் கூறியுள்ளனர். (க-5)

## வீதி திருத்தம்

(நல்லூர்)

கடந்த முப்பது வருடங்களுக்கு மேல் திருத்தப்படாதிருந்த புத்தூர் கலைமதி வீதி தற்பொழுது கோப்பாய் பிரதேச சபையால் திருத்தப்பட்டு வருகிறது.

இதனால் நீண்டகாலமாக போக்குவரத்து செய்வதில் மக்கள் பட்ட கஷ்டங்கள் நீங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (த-134)

## கமலாசினி வித்தியாலயத்தின் முன்மாதிரி

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் முதலாவது பங்குனி திங்களில் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் நடாத்திய பொங்கல் பூஜையின்போது முன்மாதிரியான செயற்பாடாக மட்டுவில் கமலாசினி வித்தியாலய 3 ஆசிரியர்கள் 12 மாணவர்கள் இப்பூஜையில் கலந்துகொண்டார்கள். இவர்களது செயல்பாட்டின் நிறைவாக இவ்வித்தியாலயத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ண- விவேகாணந்தர் நூல்களை இன்று காலை 10 மணியளவில் வித்தியாலய அதிபரிடம் சுவாமி சித்ரூபானந்தா வழங்கவுள்ளார். (து)

# தென்கொரியாவில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு உள்ளதாம்

## அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையர்களுக்கு கொரியாவில் அதிக தொழில் வாய்ப்பு உள்ளதாக இலங்கைக்கான கொரியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் தொழிலின் நிமித்தம் கொரியாவிற்குச் செல்லும்போது தமது தொழில் குறித்து அறிந்திருக்க வேண்டியது அவசியமென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது தென்கொரியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரியாவில் 15 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள் இலங்கையர்களுக்கு உள்ளதாகவும் எனினும் தற்போது 5 ஆயிரம் இலங்கையர்களே அங்கு தொழில் புரிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரியாவிற்குச் செல்லும் இலங்கையர்கள் தூதரகத்தின் அனுமதியுடன் செல்ல வேண்டுமென்றும் தமது திறமைகளின் அடிப்படையில் கொரிய சட்ட திட்டங்களுக்கு அமைவாக அங்கு சென்றால் எந்தவித பிரச்சினைகளும் இன்றி தொழில் புரிய முடியுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-9)

# ஒளிப்படக் கண்காட்சி

தமிழர் தாயகப் பகுதிகளில் ஆழிப்பேரலை ஏற்படுத்தி பேரழிவுகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் செயற்திட்டங்களையும் நோர்வே நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கும் ஒளிப்படக் கண்காட்சி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான ஒருவார காலத்திற்கு ஒஸ்லோ மாநகர சபை மண்டபத்தில் இக்கண்காட்சி நடைபெறும்.







கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கண்காட்சி அறிமுக நிகழ்ச்சியில் நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் றைமோன்ட் ஜோகான்சன், வெளிநாட்டமைச்சின் உயர் அதிகாரிகளில் ஒருவரான பார்பறோ பக்க ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் இந்நிகழ்வில் பங்கேற்றார்.

கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் நோர்வே வெளியுறவு அமைச்சக உயர் அதிகாரி பார்பறோ பக்க நினைவுச் சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து துணை வெளியுறவு அமைச்சர் றைமோன்ட் ஜோகான்சன் உரை நிகழ்த்தினார்.

தென்கிழக்காசியாவில் ஆழிப் பேரலை ஏற்படுத்திய விளைவுகள் பற்றி குறிப்பாக இலங்கைத்தீவில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து அவர் தனதுரையில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

அத்துடன் புனர்வாழ்வுக் கழகத்தின் நேர்த்தியான திட்டமிடலுடன் கூடிய அர்ப்பணிப்பு மிக்க பணிகளை வெகுவாகப் பாராட்டிய றைமோன்ட் ஜோகான்சன் இந்தக் கண்காட்சி பெருமளவான நோர்வேஜிய மக்களைச் சென்றடைய வேண்டுமென்று தனது வாழ்த்துக்களையும் நோர்வே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்குத் தெரிவித்தார்.

நோர்வே மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பலரும் கண்காட்சியைப் பார்வையிட வந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆழிப்பேரலை ஏற்படுத்தி அழிவுகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உடனடி மீட்பு, புனர்வாழ்வுப் பணிகள் மீள் கட்டமைப்பு செயற்திட்டங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த 160 பெரிய அளவிலான ஒளிப்படங்கள் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு படத்தினதும் பின்னணி பற்றிய செய்திகளும் படங்களின் கீழ் நோர்வேஜிய மொழியில் பதிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒஸ்லோவில் நடாத்தப்படும் இக்கண்காட்சி தொடர்ச்சியாக சுழற்சி முறையில் நோர்வேயின் பல்வேறு நகரங்களிலும் நடாத்தப்படவுள்ளது என நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (கு)

## ஆன்மீகச் சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு இன்று சாவகச்சேரி ஸ்ரீ பழனியாண்டவன் ஆலயத்தில் மாலை 4.00 மணிக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் செல்வி சீ.மகிந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இரா.ஈஸ்வரன், ஈழத்தில் முருக வழிபாடு என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (க-132,133)

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு இன்று மதியம் 12.00 மணிக்கு சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கந்தபுராண கலாசாரம் என்னும் தலைப்பில் சி.வேலாயுதம் சிறப்பச் சொற்பொழிவாற்றுவார். (க-132,133)

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீக தொடர் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 4 மணிக்கு வடமராட்சி சதாவதானி கதிரவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலையில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் திருமதி ரா.மாலதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அறநெறிச் சிந்தனைகள் என்னும் தலைப்பில் திருமதி பொ.இரத்தின சோதி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (க-132,133)





கே.டானியல் படைப்புக்கள் நூல் அறிமுக விழா நேற்று பிற்பகல் 3மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மறைந்த நூலாசிரியர் டானியலின் திருவுருவப் படத்திற்கு திரு.தெணியான் மாலை அணிவிப்பதையும் நூலின் முதற் பிரதியினை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசனிடம் இருந்து புதிய உயர் கல்லூரியின் அதிபர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் பெற்றுக் கொள்வதனையும் படங்களில் காணலாம். (படங்கள், திலீவின்பன்)

# சாதனையாளர் கௌரவிப்பு விழாவும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் சாதனை யாளர் கௌரவிப்பு விழாவும் இலவச மூக் குக் கண்ணாடி வழங்கும் வைபவமும் வைத் தியசாலை மண்டபத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வைபவங்கள் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியுமான வைத்திய கலா நிதி கே.மயிலேறும் பெருமாள் தலைமை யில் நடைபெறவுள்ளது.

வல்வைப் பிரதேசத்திலிருந்து கடந்த வருடம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சிறப்பு சித்திகளைப் பெற்ற 10 மாணவர்களும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றி 3 ஏ தரச் சித்திகளைத் தட்டிக் கொண்ட 3 மாண வர்களும், உயிர்காக்கும் பணிக்காக 21 முறை இரத்ததானம் வழங்கிச் சாதனை பூடைத்த சமூகத் தொண்டரான ரீ.சக்திவேலும் வல்வையிலிருந்து முதன் முதலாக தேசிய உதைபந்தாட்ட அணிக்குத் தெரிவான விளை யாட்டு வீரர் பா.வசந்தும் இவ்விழாவிலே பாராட்டிக் கௌரவிக்கப்படுவதோடு சுனாமி யால் பாதிக்கப்பட்ட கண்பார்வை குறைந்த 200 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி களும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி சு.பா.சுப் பிரமணியம், அவுஸ்திரேலிய செஞ்சிலு வைச்சங்க இணைப்பாளர் லயன் பிரான் மர்பி, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பா ளர் வி.செல்வராஜா, யாழ்.பிராந்திய சுகா தார திணைக்கள நிர்வாக உத்தியோகத் தர் எஸ்.சிவலிங்கம், பருத்தித்துறை பிர தேச செயலர் எஸ்.வரதீஸ்வரன் ஆகியோர் சாதனையாளர்களைப் பாராட்டிக் கௌர விக்கவுள்ளனர்.

வல்வை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ.தண்டபாணி சுதேசி கர் ஆசியுரை நிகழ்த்துவார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம், இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ள 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை யில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

பா.அபிநயன், ச.கபிலன், சி.ஜெயக் குமார், க.லாவண்யா, இ.லக்ஷியா, நா.ராஜ கோகுலன், ஜெ.வசந்தன், இ.திவாகர், ச.மதுகீர்த்தி, ஞா.கிருசாந்தி.

இதேவேளை, க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 ஏ தர சித்தி பெற்ற த.குருபரன், இ.ரமேஸ், ஆ.ஜெகந்தன் ஆகிய மூவரும் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (க-52)

## வனப்பாதுகாப்பு அதிகாரி கைது

(கொழும்பு)

மாகோ வனப் பாதுகாப்பு அதிகாரி யொருவர் இலஞ்ச ஊழல் மோசடிக் குற்றத் தடுப்பு ஆணைக்குழுவினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

ஆயிரம் ரூபா லஞ்சமாகப் பெற்றபோது இவர் கைது செய்யப்பட்டதாக ஆணைக் குழுவின் புலனாய்வுப் பிரிவின் பணிப்பா ளர் தெரிவித்தார்.

நாகொல்லாகமப் பிரதேசத்திலுள்ள ஒருவரிடம் அவரது மரத் தளபாட விற்பனை நிலையத்துக்கு 2006ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு இவர் லஞ்சம் பெற்றதாக பணிப்பாளர் தெரி வித்தார்.

இதேவேளை, சந்தேக நபரை நீதிமன்றத் தில் ஆஜர் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துவருகிறது. (க-7)

# திருமலையில் 281 வீடுகள் கையளிப்பு






வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர் மாணத் திட்டம் (நீரப்) உலக வங்கியின் நிதி உதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்து வருகின்றது.

ஒவ்வொன்றும் 2 இலட்சத்து 50 ஆயி ரம் பெறுமதியில் அமைக்கப்பட்டது.

பயனாளிகளின் துணையுடன் அமைக் கப்பட்ட இந்த 281 வீடுகளும் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டுள்ளன.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரி வில் ஆயிலியடி என்னும் இடத்தில் 20 வீடு களும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவில் முள்ளிப்பொத்தானை என்னும் இடத்தில் 124 வீடுகளும் பட்டணமும் சூழ லும் பிரதேச செயலாளர் பிரிவில் சாம்பல் தீவு என்னும் இடத்தில் 137 வீடுகளும் இவ் வாறு கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைக்கான உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கலந்துகொண்டு வீடுகளைத் திறந்து வைத் ததோடு பயனாளிகளிடம் அவற்றை கைய ளித்தார்.

இதில் நீரப் மாகாண பணிப்பாளர் எஸ்.பத்மநாதன், திருகோணமலை மாவ ட்ட பிரதி பணிப்பாளர் க.செல்வநாயகம், மாவட்ட அரசாங்க அதிபர் லீலாநந்தா மற் றும் கிண்ணியா, தம்பலகாமம், பட்டணமும் சூழலும் பிரதேசங்களுக்கான பிரதேச செய லாளர்கள் கலந்துகொண்டனர். (க)

# புதிய மின்திட்டங்கள் விரைவில் அமுலாகும்!

இலங்கையில் மேலும் பல புதிய மின் திட்டங்களை உருவாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக மின்துறை பிரதி அமைச் சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அவர் இதுபற்றிக் கூறியதாவது,

நாட்டின் மின் கட்டணத்தை பாரியள வில் குறைக்க அரசாங்கம் பல மின்திட்டங் களைச் செயற்படுத்த உள்ளது. ஆசியா விலேயே இலங்கையில்தான் மின்கட்ட ணம் அதிகம். தற்போது நாட்டின் 72 வீத மான மின் தேவையே பூர்த்தி செய்யப்படு கிறது. எதிர்வரும் 2010ஆம் ஆண்டில் இது 92 வீதமாக உயர்த்தப்படும்.

பல உத்தேச சிறு மின் திட்டங்கள் தனி யார் பங்களிப்புடன் செய்யப்படுவதால் மின்சாரசபை தொழிற்சங்கங்கள் இதனை எதிர்க்கின்றன. அரசியல் மற்றும் வேறு சில இடையூறுகளால் நுரைச்சோலை மின் திட்டம் தாமதிக்கப்பட்டது.

மொரகொல, உமஓய, ஜின் கங்க மற் றும் ப்ராண்ட்லாண்ட் மின் திட்டங்களும் மஹிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட் டுள்ளன. எதிர்ப்புகள் இருந்தபோதும் இந்த மின்திட்டங்களையும் அரசாங்கம் விரை வில் செயற்படுத்தும் என்றார் அவர். (க)

# அனைத்துலக பெண்கள் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மகளிர் குழு நடாத்தும் அனைத்துலக பெண்கள் தின விழாவும் 2005ஆம் ஆண்டு 05ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சி.க.கூ.சங்க அங்கத்தவர் களின் பிள்ளைகளைக் கௌரவித்தலும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெறும்.

குழுத்தலைவி திருமதி இ.இராசமணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராஜா வும் அவரது பாரியார் திருமதி. விக்கின ராஜாவும் முதன்மை விருந்தினர்களாக வும், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மக ளிர் குழுத்தலைவி திருமதி. ரதி சோதிலிங் கம், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதி பர் திருமதி. க.பொன்னம்பலம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான பொ.சிவலிங்கம், சி.ஐயாத்துரை, த.கந்த சாமி, யாழ்.மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம் ஆகி யோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (து)

# பக்கச் சார்பாக செயற்படும் அரசாங்க ஊடகங்கள்!

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

அரசாங்க ஊடகங்கள் பக்கச்சார்பாக செயற்படுவதாக இலங்கையின் தேர்தல் கண்காணிப்புக் குழுவான பவ்ரல் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 4ஆம் திகதி வரையிலான ஊடகங்களின் செயற்பாடுகளை கண்கா ணித்து அறிக்கை ஒன்றை பவ்ரல் அமைப்பு வெளியிட்டுள்ளது.

அரச ஊடகங்களில் பெரும்பான்மை யானவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சாதகமாக செய்திகள் வெளியிட்டன என் றும் அரச தொலைக்காட்சிகளில் அரசாங்கத் தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய ஒளி பரப்புக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக் கப்பட்டதாகவும் பவ்ரல் அறிக்கை கூறுகிறது.

ஒட்டுமொத்த செய்தி அறிக்கைகளில் 30.5 வீத நேரமானது ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்புக்குச் சாதகமான செய்தி களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கடுத்ததாக ஜே.வி.பிக்கும் சிறித ளவு சாதகமாக அரச ஊடகங்கள் செய்தி ஒளிபரப்பியுள்ளன.

அரசாங்கத்தின் 4 இலத்திரனியல் ஊட கங்களை கண்காணித்த போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 34 வீத மாகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 1.25 வீதம் சாதகமாகவும் ஒளிபரப்புச் செய்யப் பட்டுள்ளது.


ஐ.ரி.என்னில் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்புக்கு 24.9 வீதம் ஆதர வாகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 4.27 வீதம் ஆதரவாகவும் ஜே.வி.பிக்கு 1.86 வீதம் ஆதரவாகவும் செய்திகள் வெளியிடப் பட்டுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் தேர்தல் செய்தி வெளியீட்டில் 34.9 வீதம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் புக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 3.65 வீதம் ஆதரவாகவும், ஜே.வி.பிக்கு 7.76 வீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

தனியார் ஊடகங்களில் இரு கட்சிக ளும் சமமான ஆதரவு பெற்றுள்ளன. தனி யார் வானொலி ஒலிபரப்புகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 12.8 வீதம் ஆதரவும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 9.5 வீதம் ஆதரவுமாக தேர்தல் நிகழ்ச்சி கள் வெளியிடப்பட்டுள்ளன என்று பவ்ரலின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பொற்கிழி வழங்கி கௌரவம்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலய மாசி மக மஹோற்சவத்தில் 11 நாட்கள் மகாபாரதம் பற்றி தெய்வீகத் தொடர் சொற்பொழிவாற் றிய கொக்குவில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் சமயப் பணியினைப் பாராட்டி ஆலய அறங்காவ லர்கள் அவருக்கு கடந்த 15ஆம் திகதி பொன் னாடை போர்த்தி பொற்கிழி வழங்கிக் கௌர வித்தனர். (து)







பல்கலைக்கழக கலைப்பீட 3ஆம் வருட மாணவன் ஜெ.ஜெயராஜ் தயாரிப் பில் உருவான ஆழிப்பேரலை அனர்த் தத்தினைச் சித்தரிக்கும் 'மானிடம் வெல்லுமம்மா' இசைத்தட்டு வெளி யீட்டு விழாவில் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகன தாஸ் மங்கள விளக்கேற்றுவதையும், முன்னாள் துணைவேந்தர் பேராசிரி யர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இசைத் தட்டை வெளியிட்டு வைப்பதையும் பேராசிரியர் என்.சண்முகலிங்கத்தால் பேராசிரியர் மோகனதாஸ் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படு வதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்-எஸ்.ரி.ராஜா, திலீவின்பன்)

பிறரை ஏமாற்றுபவன் அதிகம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கின்றான்.

-அப்துர் றஹீம்

வலம்புரி

## ஜெனீவாப் பேச்சுக்குப்பின் நிலைமை நல்லதாக இல்லை

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி யேற்றதன் பின்னர் முதற் தடவையாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுல் செய்வது தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமுகமாக -வெற்றிகரமான முறையில் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுல் செய்தல் தொடர்பில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்தே மீண்டும் எதிர்வரும் ஏப்பிரல் மாதத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இத் தீர்மானம் இரு தரப்பாலும் எடுக்கப்பட்டிருந்தாலும் ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிபுகள் அமுல் படுத்தப் படும்போதே இரண்டாம் கட்டப்பேச்சுவார்த்தை சாத்தியமாகும்.

ஆனால்,ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டவற்றை அமுல் படுத்துவதில் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்ததாக தெரியவில்லை.

படையினர் மக்களின் வாழ்விடங்களில் ஆயுதங்களை நீட்டிய வண்ணம் உள்ளனர். எங்கு பார்த்தாலும் படையினரைக் காண முடிகின்றது.

பிரதான வீதிகளில் ஆயுதங்களுடன் நிற்கின்ற இராணுவத்தினர் யாழ்ப்பாணம் ஓர் யுத்த பூமி என்கின்றதையும், எந்நேரமும் -வேட்டுக்கள் தீர்க்கப்படலாம் என்பதையும் ஞாபகப்படுத்திய வண்ணம் உள்ளனர்.

இஃது இயல்பு நிலையன்று. பேச்சுக்கள் தொடரவேண்டுமாயின் அதன் மூலம் கிடைக்கின்ற முடிபுகள் சமாதானத்தைத் தரவேண்டுமாயின் தமிழ் மக்களின் வாழ்வியல் இயல்பு நிலைக்குத் திரும்பத்தக்கதான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.

இதனையே விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

துணைப் படைகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை ஜெனீவாப்பேச்சுக்களில் ஏற்றுக்கொண்ட அரச தரப்பு தற்போது துணைப் படை இராணுவத்துடன் சேர்ந்து இயங்க வில்லை. அரசிற்கும் துணைப்படைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றவாறு கூறிவருகிறது.

துணைப்படைக்கும் அரச படைக்குமிடையில் தொடர்பு இல்லையென்றால் அதனை ஜெனீவாப் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து கூறியிருக்க வேண்டும்.

அதற்கான பதிலை விடுதலைப்புலிகள் தெரியப்படுத்தியிருப்பர். இதனைவிடுத்து . துணைப்படையிடம் ஆயுதங்களை களைவது என ஜெனீவாவில் ஏற்றுக்கொண்டு விட்டு இங்கு வந்து கதையைப் புரட்டுவது சமாதானத்திற்கு ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை.


அத்துடன் விடுதலைப்புலிகள் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கும் நிபந்தனைவிதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. உண்மையில் இவை யாவும் தொடர் பேச்சுக்களை தடைசெய்யும் என்பதுடன் எதிர்கால அமைதியையும் குழப்பிவிடும்.

# அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் ஐக்கிய தேசியக்கட்சியே கைப்பற்றும்!

## ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

**உள்ளூராட்சி தேர்தலில் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் ஐக்கியதேசியக் கட்சியே கைப்பற்றும் என்றும் அதனைத்தொடர்ந்து நாட்டின் ஆட்சியையும் கைப்பற்றுவது உறுதி என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மாத்தளை ஹரிசன் ஜோன் சுற்று வட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாத்தளை மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கு ஆதரவு திரட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றிணைந்து செயற்பட்ட கூட்டணிக் கட்சிகள் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் பிரிந்துநின்று போட்டியிடுகின்றன.

பொ.ஐ.மு.வை எதிர்த்து ஜே.வி.பியும் ஜே.வி.பியை எதிர்த்து பொ. ஐ.முவும் மோதலில் இறங்கியுள்ளன. ஆனால் அவர்கள் எல்லோரும் சேர்ந்து தான் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினார்கள். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற 3மாத காலத்திற்குள் மா, பால்மா பாண், சீனி , பருப்பு போன்றவற்றின் விலைகள் பலமடங்கு அதிகரித்து வருகின்றன. இதைப்பற்றி எவரும் கவலைப்படுவதில்லை. ஆனால் நான் பிரதமராகப் பொறுப்பேற்ற காலப்பகுதியில் அத்தியாவசியப்பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தினேன். பணவீக்கத்தைக் குறைத்தேன். ரூபாவின் பெறுமதியை உயர்த்தினேன் . ஆனால் இவர்கள் மக்களுக்காக எதனையும் செய்வதாகத் தெரியவில்லை.

நான்பிரதமராகப் பொறுப்பேற்றதன் பின்புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டு நாட்டை அவர்களுக்கு தாரை வார்த்துக் காடுத்துவிட்டதாக கூக்குரலிட்டனர். வெள்ளைப் புலிகளை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும் என்று கோசமிட்டனர்.

நான் புலிகளுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கிழித்தெறிவோம் என்று வீரம் பேசினர். இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது பெரிய காரியம் அல்ல. பதின்னான்கு நாட்களில் அதனை கிழித்தெறிய முடியும். செய்தார்களா? வெள்ளைப் புலிகளை நாட்டைவிட்டு அவர்களால் விரட்ட முடிந்ததா? ஏன் முடிய வில்லை.

நான் புலிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை கிழித்தெறிவதாகவாய் வீரம் பேசிக்கொண்டு ஜெனீவா சென்றனர். ஆனால் நடந்தது என்ன அந்தஒப்பந்தம்சரியானது. அதைப் பாதுகாக்க வேண்டும் என்று அங்கு வைத்து உலகறிய ஏற்றுக்கொண்டுள்ளனர். நான்செய்தது சரிஎன்பதை மஹிந்த ஜனாதிபதியாக இந்த 3 மாத காலத்துள் ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இன்று இந்த நாடு இருப்பதே ரணில் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் தான் என்பது இப்போது உலகறிய ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது.

நம்மிடமும் குறைபாடுகள் உண்டு . ஆனால் அவற்றை திருத்திக் கொண்டு முன் செல்லக்கூடிய துணிவும் ஆற்றலும் தன்னம்பிக்கையும் எமக்கு உள்ளது. அதனால்தான் மக்கள் எம்மீது நம்பிக்கையை வைத்திருக்கின்றனர்.

மக்கள் எம் மீதுவைத்திருக்கும் நம்பிக்கை நாம் ஒருபோதும் வீணடிக்கமாட்டோம். மாத்தளை மாநகர சபையையும் மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச சபைகளையும் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெற்றுத்தாருங்கள். குறுகிய காலத்திலேயே இந்நாட்டின் ஆட்சியையும் நாம் கைப்பற்றிக் காட்டுகிறோம்என்றார் ரணில் விக்கிரமசிங்க. (க-7)

# ஜே.வி.பி,ஹெல உறுமயவின் ஆதரவு தமக்கு தேவை என்கிறார் மஹிந்த

(கொழும்பு)

ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவு தமது அரசாங்கத்துக்குத் தேவை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டம் வியங்கொடவில் நேற்று முன்தினம் பிற்பகல் நடந்த சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் அவர் உரையாற்றும் போதே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தன் ஆட்சிக்காலம் முழுமையும் நீடிக்கும் என்று தெரிந்த பல்வேறு கட்சியினரும் சுதந்திரக் கட்சியில் தொடர்ந்து இணைந்து வருகின்றனர். எமது அரசாங்கம் தொடர்ந்து இயங்குவதற்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினரது ஆதரவும் மிகவும் முக்கியமானது என்றார்.

இந்நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய சந்திரிகாவின் சகோதரரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான அனுரா பண்டார நாயக்க எதிர்வரும் 12ஆண்டு காலமும் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ நீடிப்பதற்கு தாம் முழு ஒத்துழைப்பு அளிப்பதாகத் தெரிவித்தார்.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டை வலியுறுத்திக்கொண்டு நோர்வே அனுசரணையாளர்களை வெளியேற்றவேண்டும் என்று ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் இரு கட்சிகளினது ஆதரவும் எமக்கு அவசியமானது என்று மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. (க)

## சகல மதங்களையும் சமமாக மதிப்பவர் ஜனாதிபதி மஹிந்த

### பஷீர் சேகுதாவுத்

(கொழும்பு)

இந்த நாட்டில் உள்ள சகல மதங்களையும் சம அந்தஸ்துடன் மதிக்கும் சம தர்ம கொள்கை தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கர்ணப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார். பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவமாகிய மதங்களுக்கென்று தனித்தனியாக அமைச்சுக்களை உருவாக்கிவிட்டு பௌத்த மதத்திற்கு மாத்திரம் உயர்வான அந்தஸ்தை வழங்கும் பாரபட்சமான நடைமுறை எமது நாட்டில் இப்பொழுது இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சகல மதங்களினதும் திணைக்களங்களை ஒன்றிணைத்து மத விவகார அமைச்சு என்ற அடிப்படையில் நிர்வகிக்கின்ற போது சிறுபான்மை மக்கள்பின்பற்றுகின்ற மதங்கள் சமத்துவமாக நோக்கப்படுவதற்கு பதிலாக பௌத்த மதத்திற்கு கூடுதல் சலுகைகள் வழங்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதால் இது விடயத்தில் ஜனாதிபதி அதிக கவனம் செலுத்தவேண்டும் என்றார். (க-9)

## க.கா.குழு -எழிலன் சந்திப்பு

(திருகோணமலை)

யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதிநிதிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இடம்பெற்ற இச்சந்திப்பில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் வோ ஜோன்சன் கலந்து கொண்டார். இதன்போது 20, 21ஆம் திகதிகளில் மூதூர் கிழக்குக் கடற்பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து ஆராயப்பட்டது. தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் கடலில் போக்குவரத்தில் ஈடுபடவும், பயிற்சிகளில் ஈடுபடவும் தமது கட்டுப்பாட்டுகடற்பரப்பு அடையாளப்படுத்தப்படவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்ததாகவும் அதனை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்த மூதூர் கிழக்குப் பிரதேசத்தில், கடல் மற்றும்தரையில் கண்காணிப்புக்குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



அன்பு வழியில் நிற்பது என்பது ஆன்மீக வழியின் ஓர் அங்கமே ஆகும். பாடு என்ற சொல்லுக்குத் துன்பம் என்றும் ஒரு பொருள் உண்டு .முதலில் நாம் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும். அந்த அன்பே பிறகு மலர்ந்து அருளாக மாறுகின்றது. அன்பே அருளுக்கு அழைத்துச் செல்கிறது.

சுவாமி விவேகானந்தர்

# அடிப்படை ஆங்கிலப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தோரின் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

அரச கருமமொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவப் பயிற்சி நெறித் திணைக்களத்தினால் அரச ஊழியர்களுக்கு நடாத்தப்பட்ட அடிப்படை ஆங்கிலப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

அவர்களுக்கான சான்றிதழ்களை யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் கடமைநாட்களில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.பிராந்திய ஆண்ணயாளர் தெரிவித்துள்ளார்.

சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு;

பி.தர்மசங்கரன் (வலி கிழக்கு பிரதேச சபை), எ.திருநாவுக்கரசு (தேர்தல் அலுவலகம் யாழ்), வி.யோகராசா (வலயக்கல்விப் பணிமனை யாழ்.), கே.சௌந்தரராஜன் (ஊர்காவற்றுறை பிரதேசசபை), பி.ஜெயகரன் (வலி. வடக்கு பிரதேச சபை), என்.சச்சிதானந்தம் (நல்லூர் பிரதேசசபை),கே.தயானீஸ்வரி (நல்லூர் பிரதேசசபை), வி.சண்முகம்(பிராந்திய ஆணையாளர் அலுவலகம்),டி.எஸ்.சொலமன் (விவசாயத் திணைக்களம் யாழ்.), எஸ்.சுஜீந்திரராஜன்(நல்லூர் பிரதேசசபை), ஆர்.யக்குலின் (திட்டமிடல் செயலகம் கச்சேரி), கே.நடராஜா (யாழ்.செயலகம்),

எஸ்.சிறீகரன் (யாழ்.செயலகம்),பி.மஞ்சுலா (கல்வித்திணைக்களம் யாழ்.),ஜெ.பத்மவதி (கல்வித்திணைக்களம் யாழ்.),ரி.சண்முகநாதன் (நிலஅளவைத் திணைக்களம்), எஸ்.தனராஜ் (நிலஅளவைத் திணைக்களம்), ரி.சிவநாத சர்மா (யாழ்.செயலகம்),கே.வீணா (ஊர்காவற்றுறை பிரதேசசபை),எஸ்.சிவமோகன் (வலிகாமம் கல்வி வலயம்), எஸ். சாரதாதேவி (வலிகாமம் கல்வி வலயம்), பி.ஜசீலா (வலிகாமம் கல்வி வலயம்), எஸ். மாணிக்கம் (வலிகாமம் கல்வி வலயம்), ஐ.சிவலோகநாதன் (வலிகாமம் வடக்கு பிரதேசசபை),

பி.வைரமுத்து (வலிகாமம் வடக்கு பிரதேசசபை),ஏ.கணேசானந்தராஜா (வலிகாமம் வடக்கு பிரதேசசபை), எம்.ராதா (கல்வி வலயம் வலிகாமம்),எஸ்.நாகமுத்து (கல்வி வலயம் வடமராட்சி), எஸ்.சந்திரயோகன் (கல்வி வலயம் வடமராட்சி), பி.ராசமணி (கல்வி வலயம் வடமராட்சி), எஸ்.தேவகி (கல்வி வலயம் வடமராட்சி),ஆர்.சுதர்சன் (கல்வி வலயம் வடமராட்சி), எஸ்.லிங்கேஸ்வரன் (கல்வி வலயம் வடமராட்சி), வி.மைதிலி (கல்வி வலயம் வடமராட்சி) ஆர்.ரமேஸ் (கல்வி வலயம் பருத்தித்துறை),

ஆர் .சத்தியானந்தன் (நகரசபை பருத்தித்துறை), ரி.ராதிகா (நகரசபை வல்வெட்டித்துறை), எஸ்.திருஞானசுந்தரம் (நகரசபை வல்வெட்டித்துறை), எஸ்.பரமேஸ்வரன் (கரவெட்டி பிரதேசசபை),சி.நாகேந்திரம் (சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை பருத்தித்துறை), பி.ரவிச்சந்திரன் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை பருத்தித்துறை),எஸ். பிரணவன் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பருத்தித்துறை). (ச)

# கைதான ஐந்து மீனவர்களுடன் மனித உரிமை அதிகாரி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற் பரப்பில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை பயங்கரவாதச் சட்ட தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள ஐந்து மீனவர்களையும் நேற்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தைச் சேர்ந்த விசாரணை அதிகாரி சென்று சந்தித்துள்ளார்.

இவர்களில் திருகோணமலையைச் சேர்ந்த அருணாசலம் டேவிட், வீரசிங்கம் மனோகரன்; முத்துவேல் ஸ்ரீகந்தராசா மூவரும் மன்னார் பேசாலையைச் சேர்ந்த பிரான்ஸிஸ் மனோகரன் மற்றும் வாழைச்சேனையைச் சேர்ந்த பொடியப்பு சுபசேன ஆகியோரே தடுத்து வைத்துள்ளவர்களாவர்.

பொலிஸாரின் அறிவித்தலின் அடிப்படையிலேயே இவர்களைச் சந்தித்ததாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலர்கள் தெரிவித்தனர். (ச-5)

# முன்னாள் புலி உறுப்பினர் கடத்தப்பட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப்புலி முன்னாள் உறுப்பினரான வைரமுத்து அருள்பிரகாசம் (வயது 32) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பிள்ளையாரடி பரவைக்கடல் பகுதியில் இவரது சடலம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்தபோது கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட வைரமுத்து விடுதலைப்புலி உறுப்பினராக 9 ஆண்டுகள் இருந்தவர். ஜெயந்தன் படையணியில் பணியாற்றியவர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளிடம் இருந்து விலகி லோகிதராஜ் வாசுகியை திருமணம் செய்துகொண்டார் என தெரிவிக்கப்பட்டது. இவருக்கு இரு குழந்தைகள் உள்ளன. (ச-5)

# கைதான இளைஞன் பிணையில் விடுதலை

மணற்காடு ,குடத்தனை இராணுவக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞன் நீதிமன்றத்தினால் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

மணற்காடு குடத்தனையைச் சேர்ந்த டேவிற் அன்ரன் விஜயகுமார் (வயது 24) என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

அவரது குற்றம் தொடர்பாக தகுந்த ஆதாரங்கள் இல்லை என தெரிவித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் க.அரியநாயகம் 5 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு ஆட் பிணையில் செல்ல அனுமதித்தார்.

இதேவேளை கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் பிரஸ்தாப இளைஞனை நீதிமன்ற வளாகத்தில் சுமார் அரை மணிநேரம் விசாரணை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-101)

# அழகெழல் போட்டிகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வருடாந்தம் நடாத்தும் அழகெழல் நிகழ்வுகள் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று சித்திரம், நாடகம் ஆகியனவும் இசை நடனப்போட்டிகளும் நடைபெறும். இன்றைய தென்மராட்சி வலய அழகெழல் நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக்கல்விப்பணிப்பாளர் கோ.கைலைநாதன் கலந்து கொள்கிறார்.

நாளைய நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்தரக்கிளை பிரதம முகாமையாளர் திரு.என். சிவரட்ணம் கலந்துகொள்வார். (ச)

# உயர் தொழிநுட்ப நிறுவனத்திற்கு முன் நேற்று பெருமளவு இராணுவம் குவிப்பு

## மாணவர்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவின் நான்காம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் தேசியக்கொடி ஏற்றலுடன் நடைபெற்றுள்ளது.

நிகழ்வு நடைபெற்றபோது நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் தொழிநுட்பநிறுவனத்திற்கு வெளியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் இராணுவத்தினர் உயர் தொழிநுட்ப நிறுவனத்திற்குச் சென்று மாணவர்கள், விரிவுரையாளர்களை மிரட்டி விட்டுச் சென்றனர்.

எனினும் நேற்று மாணவர்கள் தமிழீழ தேசியக்கொடி ஏற்றி நிகழ்வுகளை நடத்தினர். இதேவேளை இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டது தொடர்பாக போர்நிறுத்தக் க்கண்காணிப்புக்குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த கண்காணிப்புக்குழுவினர் மாணவர்களுடனும் விரிவுரையாளர்களுடனும் கலந்துரையாடினர்.

உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் மாணவர்களுக்குமிடையே இடம் பெற்ற சந்திப்புத் தொடர்பான செய்தியைச் சேகரிக்கச் சென்ற செய்தியாளர் ஒருவர் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## முஸ்லீம் ஊர்காவல்...

கடந்த மார்ச் 14 ஆம் திகதி மதுபோதையில் விடுதலைப்புலிகளின் ஈச்சிலம்பற்றைப் பகுதிக்குள் இருவரும் நுழைந்ததையடுத்து கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நோர்வே அரசை...

நோர்வே அரசாங்கத்தை நாட்டில் இருந்து விரட்டுவதாக ஜனாதிபதி மகிந்த தேர்தல் உரையில் தெரிவித்திருந்தார்.

நாமும் அதனை ஏற்றுக்கொண்டோம். ஆனால் அது நடைமுறையில் சாத்தியப்படாத விடயம் என தற்போது உணர்ந்து கொண்டுள்ளோம்.

இதனை உணர்ந்த ஜனாதிபதியும் நோர்வேயே சமாதான அனுரணையாளராக இருக்கவேண்டுமென அறிவித்துள்ளார் என அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நோர்வே அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகினால் -விலக்கிக் கொண்டால் விடுதலைப்புலிகள் நிச்சயமாக பேச்சு மேசையில் இருந்து முற்றாக விலகிக் கொள்வர்.

அவர்கள் வேறு எந்த ஏற்பாட்டாளரையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகிச்சென்றால் மீண்டும் யுத்தம் ஏற்படும்.

இதனையே ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியன விரும்புகின்றன. யுத்தமா ? சமாதானமா? என்பதனை ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டுமென அநுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார். (ச.4)


# அறிவித்தல்

யாழ்-கொழும்பு செல்லும் பயணிகளின் கவனத்திற்கு

24.03.2006 இன்று வெள்ளிக்கிழமை முதல் பெரிய பஸ்சேவைக்கான ஆசனப் பதிவுகள் திறிஸ்ரார் ஹோட்டலில் நடைபெற மாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

திறிஸ்ரார் ஹோட்டல்
162, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

(C-236)


# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா வைரவப்பிள்ளை

புலோலி ,புற்றளையைச் சேர்ந்த திருமதி அன்னம்மா வைரவப்பிள்ளை 22.03.2006 இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் ,பண்டிதர், - சைவப்புலவர் - வித்துவான் திரு. குக.வைரவப்பிள்ளை அவர்களின் மனைவியும், கோப் பெருந்தேவி, சிவச்சந்திர தேவன், சிவச்சூரியதேவன், செம்மனச்செல்வி ,சிவாக்கினிதேவன் , மெல்லியல், சிவசிம்மதேவன் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.03.2006 வியாழக் கிழமை மாலை ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெற்றது.

தகவல்;
மெல்லியல்

(C-237)


இன்று மட்டும்
தங்கப் பச்சான், நவ்யா நாயர் நடித்த
சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

25.03.2006 முதல்
விஷால். மீராஜெஸ்மின் நடித்த
சண்டக் கோழி
கா.நே:-10.30,2.30, 6.30,9.30 (பு.நே)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 24.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.